Women's Action Network
WAN

குரல். 05

# கோசம்

முதலாம் காலாண்டு - 2012



எமது

# கோசம் . . .

2012 ஆம் ஆண்டின் முதலாவது இதழாக இவ்விதழ் வெளிவருகின்றது. பெண்கள் அன்றாடம் பல தளங்களில் இருந்து முகங் கொடுக்கும் பிரச்சினைகள், பாதிப்புகள், இழப்புகள், தேவைகள், சுரண்டல்கள் என்பவற்றோடு பெண்களது சாதனைகள், செயற்பாடுகள் எனப் பல விடயங்களை முன்னிலைப்படுத்தி இச்சஞ்சிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது. இங்கு பெண்கள் தாமே தமது பிரச்சினைகளை வெளிக் கொணர்வதில் காட்டும் ஆர்வத்தை அவர்களது எழுத்துகள் பிரதிபலிக்கின்றன.

அந்த வகையில் பெரும்பாலும் யுத்தம் நிறைவடைந்த நாடு என்ற வகையிலும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழுகின்ற மற்றும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் என்ற வகையிலும் பலர் தத்தமது தேவைகளை தாமே வெளிக்கொணர வேண்டிய அவசியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அத்தோடு அண்மைக் காலத்தில் துரிதமாக விலையேற்றப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக குடும்பங்களில் நாளாந்தம் ஏற்படுகின்ற பொருளாதாரச் சிக்கல்கள் பெரும் தாக்கத்தைத் தோற்றுவித்துள்ளன.

சமூகம் மற்றும் குடும்பத் தளங்களில் பொருளாதாரச் சிக்கல் காரணமாகப் பெண்கள் வன்முறைகளை எதிர்கொண்டு வருகின்றனர். யுத்தம் நிறைவடைந்த பின்னர் கூட அபிவிருத்தி மற்றும் மீள் கட்டுமானம் தொடர்பில் பாதிப்படைந்த மக்கள் இன்னும் மீளாத தன்மையுடன் வாழ்வதையும், உள ரீதியில் மீட்சியடையாதவர்களாகவும், மேலும் மேலும் மன அழுத்தத்திற்கு உள்ளாகும் இக்கட்டான சூழலிலேயே இன்னும் அடிப்படை வசதிகள் இன்றி பொருளாதார மேம்பாடின்றி வாழ்வதை யாரும் மறுக்க முடியாது.

பெண்கள் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்திலே, தற்காலத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பாரிய சவால்களை சாதகமாக்கும் முயற்சியில் உரிய தரப்பினர் அக்கறை செலுத்துவார்களேயானால் அது பயன்பெறுமதியான ஒன்றாகவே இருக்கும்.

***ஆசிரியை***




பெண்கள் மீதான பேதங்காட்டல்கள் : ஓர் சமூகக் கண்ணோட்டம் 2





இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெண்களின் நிலை 7





இலங்கை இராணுவத்திற்கு மன்னார் தரவன்கோட்டை வீதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காணி தொடர்பாக மக்கள் அச்சம்... 17





பெண்கள் உண்மையான சமாதானத்திற்கும் நீதிக்கும் வகைப்பொறுப்பிற்கும் அழைப்பு விடுக்கின்றனர் 25



ISSN: 2012-8933

**ஆசிரியை**
குகநிதி குணச்சந்திரன்

**வெளியீடு**
பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு

**அட்டைப்படம்**
மாணவர் சிலரது குழுச் செயற்பாடு

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**
வேலாயுதம் ஜெயச்சித்ரா

Women's Action Network WAN

**வெளியீடு**
பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு
8/3, 202, டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை
கொழும்பு 06, இலங்கை.

Women Action Network
8/3, 202 , W.A. Silva Mawathe, Colombo 06,
Sri Lanka. Email: tmwn2010@gmail.com

# பெண்கள் மீதான பேதங்காட்டல்கள்

## ஓர் சமூகக் கண்ணோட்டம்



http://www.cardboiled.com/ecards/holidays/women-equality-day/women-equality-day-20004645/send.jhtml

நாடொன்றின் முழுமையானதும் நிறைவானதுமான அபிவிருத்தி, உலகத்தின் பொதுநலன் மற்றும் சமாதானம் என்பன அடையப்பெறுவதற்கு சகல துறைகளிலும் ஆண்களைப் போன்று பெண்களினதும் சமத்துவமான பங்குபற்றலும் அத்தியாவசியமாகின்றது.

அரசியல் பொருளாதார ரீதியிலும் சமூக கலாசார ரீதியிலும் குடியியல் மற்றும் வாழ்வின் பிறதுறைகள் சார்ந்த ஆண்களுக்குள்ள மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்கவிடாமல் பெண்களை தடுக்கின்ற அல்லது பெண்கள் என்பதால் மறுக்கப்படுகின்ற சகலவிதமான செயல்களும் நடைமுறைகளும் பெண்களுக்கெதிரான பேதங்காட்டல்களாகும்.

இப்பேதங்காட்டல்கள் எமது பகுதிகளிலும் மிகச்சாதாரணமாக நடக்கின்றன. அவற்றின் தன்மைகளாவன :

1. மனித உரிமைகளை அனுபவித்தல், அங்கீகரித்தல், பிரயோகித்தல் என்பவற்றில் ஆண்களும் பெண்களும் சமமாக மதிக்கப்படாமை
2. கல்வியில் தாராள மனப்பான்மை இருந்தாலும் ஊதியத்தில் காட்டும் மட்டுப்பாடுகள்
3. குடும்பத்தில் இரண்டாம் நிலைப் பிரஜையாகவே கருதப்படுதல், குடும்ப வன்முறை மற்றும் குடும்பத்தினரால் பாகுபாடு காட்டப்படல்
4. தேசிய இனத்தை மாற்றவோ பின்பற்றவோ மறுப்புக் கூறல்
5. இருதார மணம்
6. விவாகரத்து
7. வேலையிடத்தில் சமத்துவமின்மை மற்றும் பாலியல் தொல்லை
8. பொது இடங்களிலும் அல்லது பொதுப் போக்குவரத்துகளிலும் பாலியல் தொல்லை மற்றும் பகிடிவதை

பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து விடயங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கை 1979இல் ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பெண்களுக்கான உரிமைகளின் சர்வதேச சட்டமாக கொள்ளப்படுகிறது.

- கல்வித்துறையில் பேதங்காட்டல்களை ஒழித்தல் வேண்டும் என்று இணக்க உடன்படிக்கையில் *உறுப்புரை 10* உம்
- வேலை செய்வதற்கான உரிமையில் சமத்துவம் தேவை என்று இணக்க உடன்படிக்கையில் *உறுப்புரை 11* உம் சொல்கின்றன.

தற்போது எமது பகுதியில் மட்டுமல்ல நாடு தழுவிய ரீதியிலும் ஒரு பெண்பிள்ளை, தான் கல்விகற்க வேண்டும் என்று முடிவெடுத்து முயற்சியும் செய்தால் அவளால் தாராளமாகக் கற்க முடியும். வீட்டாரிடம் சண்டைபோட்டாவது கல்விகற்கும் உரிமையைப் பெற்றுக் கொள்ள முடிகின்ற பெண்களால் தமது தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பைப் பெறுவதிலும் அவ்வாறன்றி வேலையைப் பெற்றுக் கொண்டாலும் அந்த வேலைக்குத்தகுந்த அதாவது அவளது உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தைப் பெறமுடிவதில்லை. தொழிற் பாகுபாடும் ஊதியத்தில் பேதங்காட்டலும், பெண்களின் உழைப்பை இயன்றளவு கறந்தெடுப்பது போன்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. இதனை சாதாரண கடைகளிலிருந்து அலுவலகங்கள் வரை காணலாம்.

தனது அறிவுக்கும் ஆற்றலுக்கும் பொருந்தக்கூடிய தொழிலை இருபாலாரும் செய்யும் உரிமை இருந்தாலும் அதை சமுதாயத்திடம் போராடிப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் பெண்ணுக்கே அதிகமாகும்.

போதியளவு பிரசவகால விடுப்பு, பதவி உயர்வு, வேலைக்குரித்தான வசதி போன்றவை அரசாங்கத்தால் அரச அலுவலகங்களில் ஓரளவு பேணப்பட்டாலும் தனியார் நிறுவனங்களிலும் சாதாரண சமுதாயத்திலும் அந்த வாய்ப்பு வசதிகள் இல்லை என்றே சொல்ல முடியும். பொதுவான நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுக்கு பிரசவகால விடுப்பு சம்பளத்துடன் கூடியதாக இருப்பதில்லை. அத்தோடு அவளது உடல்நலம் மனநலம் சார்ந்து அவளால் போதியளவு விடுப்பை எடுத்துக் கொள்ளவும் முடிவதில்லை.

அது மட்டுமல்லாமல் தமது திறமையை வளர்ப்பதற்காக அல்லது திறன்களை சமுதாயத்திற்காகவோ நாட்டுக்காகவோ பயன்படுத்துவதற்காக என்றில்லாமல் பெண்கள் தமது பொருளாதாரத்தை பெற்றுக்கொள்வதற்காகவாவது வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் எமது சூழலில் இருக்கிறது. வேலைக்குச் செல்லும் பெண்கள் வேலைத்தளத்தில் பாலியல் தொல்லை, பொது இடங்களிலும் அல்லது பொதுப் போக்குவரத்துகளிலும் பாலியல் தொல்லை, பகிடிவதை என்பன போன்ற வன்முறைகளுக்கு அடிக்கடி ஆளாகின்றார்கள். இவ்வாறான பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள், வல்லுறவு, சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் மறுப்பு என்பவற்றால் பெண்கள் இரண்டாம் நிலைப் பிரஜைகளாகவே கருதப்படுகின்றனர். தமது வேலைத் தளங்களிலும் வேலைக்குச் செல்கின்ற போக்குவரத்து சாதனங்களிலும் தாம் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதில்லை எனச் சில பெண்களால் மட்டும்தான் கூற முடியும். இதன் விளைவாகவும் பெண்களது முழு ஆற்றலும் சமூகத்திற்குப் பயன்படும்படியாகப் பங்களிப்புச் செய்வதற்கு இடைஞ்சலாகவே இருக்கின்றமை உண்மையானதே.

பாலியல் துன்புறுத்தல் எனப்படுவது யாதெனில்,

- உடலளவிலான தொடுதல்கள் அல்லது தொடுதலுக்கான எத்தனங்கள்
- பாலியல் சலுகைக்கான வேண்டுகோள்
- பாலியல் சார்ந்த நகைச் சுவைப் பேச்சுகள்
- நிர்வாணப் படங்களைக் காட்சிப்படுத்தல்
- விரும்பத்தகாத வகையில் உடலாலோ, வாய்மொழியாலோ பாலியலை வெளிப்படுத்தும் நடத்தை

இவ்வாறான பாலியல் துன்புறுத்தல்களில் ஒன்றுக்காவது முகம் கொடுக்காமல் பெண்களால் வேலை செய்ய முடிவதில்லை.

ஆகக் குறைந்தது அவளது உடை கூட அடிக்கடி பிரச்சினையை ஏற்படுத்துகின்ற ஒரு விடயமாகவே சகல மட்டங்களிலும் இருந்து வருகின்றது. ஒரு பெண்ணால் அவளின் பணியிடம் சார்ந்த அல்லது கற்குமிடம் சார்ந்த கட்டளைகளுக்கு அமைவாகவே உடைகளை அணியப் பணிக்கப்பட்டவளாகிறாள். அது அவளது சுதந்திரமான நடமாட்டத்திற்கு அசௌகரியமானதாக இருந்தாலும் அதை அவள் பெண் என்பதால் பின்பற்ற வேண்டியவளாகிறாள். சேலைதான் கட்டவேண்டும் என்பதால் தமது தெரிவை இழக்கின்ற பெண்களைக் காணும் அதேவேளை, குட்டைப் பாவாடைதான் அணிய வேண்டும் என்பதால் தமது தெரிவை இழக்கின்ற பெண்களையும் எமது சமுதாயத்தில் காண்கிறோம்.

குடும்ப நலனுக்கான உரிமையில் சமத்துவமுண்டு என *உறுப்புரை 13* சொல்கிறது. ஆனால் பொதுவான குடும்பங்களை பொறுத்தவரையில் பெண்களென்பதாலேயே பேதங்காட்டப்படுகின்ற நடைமுறைகள் வழிவழிவந்த பழக்கமாக, வாழ்க்கை முறையாக அமைந்து விட்டதால் குடும்பத்தில் பெண்ணின் பங்கு ஆணுக்கு நிகராக எப்போதுமே இருப்பதில்லை. சில குடும்பங்களில் விதிவிலக்காக இருந்தாலும் பெரும்பாலான குடும்பங்கள் ஆண்களின் ஆட்சியிலேயே நடைபெறுகின்றன. அதனால் அங்கு தாயோ, மனைவியோ, மகளோ அடுத்தடுத்த இடங்களுக்குத் தள்ளப்படுவதால் பெண்ணின் சம உரிமை மறுக்கப்படுகிறது. கணவன் மனைவியாகவே இருந்தாலும் பிள்ளைகளின் வாழ்வில் முடிவெடுக்கும் உரிமை பெண்ணைவிட ஆணுக்கே அதிகமிருக்கின்ற சமுதாயமாகவே இன்றுவரை எமது சமுதாயம் இருக்கின்றது.

மேலும், பெண்ணின் குரல் வெற்றுக்குரலாகவே போய்விடுவதும் அவளது உரிமைகளில் அக்கறை காட்டாத குடும்பத்து ஆண்களையும் இன்றைய சூழலிலும் காணலாம். பெண் தனக்காக தன் உரிமைக்காக குரல் கொடுக்கலாம் முணுமுணுக்கலாம். கணவரோடோ, மகனோடோ, தந்தையோடோ கோபித்துக் கொண்டு இருந்தாலும் கூட பெண்ணின் உரிமைக் குரலுக்கு பெரும்பாலும் மதிப்பளிக்கப்படுவதில்லை. கருத்துச் சுதந்திரத்திலும் முடிவெடுக்கும் உரிமையிலும் குடும்பத்தில் ஆண்களிடமே அதிகம் உரிமை காணப்படுகின்றது. பெண்களின் கருத்துகள் இரண்டாம் நிலையாகவே காது கொடுத்துக் கேட்கப்படுகின்றன.

இதன் காரணமாக,

- பெண்களின் சமுதாய அறிவு மட்டுப்படுத்தப்படுகிறது
- அவர்களின் அந்தஸ்துக்கான வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுகிறது

- அவர்களது வெளிப்பாட்டுத்திறன்கள் மழுங்கடிக்கப்படுகின்றன.
- அவர்கள் தமது சுயகௌரவத்தால் தரம்குறைந்தவர்கள் என்ற தாழ்வு மனோநிலையை உணர்வதால் மன அழுத்தங்களையும் பெறுகிறார்கள்.

உடல் நலக் கவனிப்பிலான சமத்துவம் பற்றி இணக்க உடன்படிக்கையில் *உறுப்புரை 12* சொல்வதன்படி பெண்களுக்கான சுகாதாரப் பிரச்சினைகள் வரும் போது அல்லது ஒரு பெண் தான் விரும்பியபோது கருத்தரிப்பது, விருப்பமில்லாதபோது குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பது போன்ற வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சமுதாயத்தில் வெளிப்படையான ஆதரவு இருப்பதில்லை. குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி ஒரு மணம் புரிந்த பெண்ணால் கூட வெளிப்படையாகப் பேசவோ தெரிந்து கொள்ளவோ முடிவதில்லை. அவசியப்படின் இரகசியமாகவே கற்கவும் ஆலோசனை கேட்கவும் முடிகிறது.

**எந்தவொரு நபரினதும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகாமல் தனக்கான துணையைத் தெரிவு செய்வதற்கான உரிமை எல்லாப் பெண்களுக்கும் கிடைப்பதில்லை. ஒரு சிலருக்கு அது சாத்தியப்பட்டாலும் பெரும்பாலான பெண்கள் தாம் தெரிவு செய்த துணையுடன் வாழ்வதற்கான குடும்ப அங்கத்தவர்களின் மறுப்புக் காரணமாக வீட்டைவிட்டு ஓடிப்போக வேண்டியவளாகி றாள். அதன் காரணமாக அவளது பாதுகாப்புக் கேள்விக் குறியாகிறது. பலவேளைகளில் ஓடிப்போனவள் ஏமாற்றப்பட்டவளாக மீண்டும் சமுதாய சாக்கடையில் தூக்கி வீசப்படுகிறாள். அல்லது அப்படி வீசப்பட்டு விடக்கூடாதே என்ற அச்சத்தில் தனது கணவனுக்கு கட்டுப்பட்டவளாய் தன் சுதந்திரங்களையும் உரிமைகளையும் தியாகம் செய்துவிட்டு நடைப்பிணம் போல வாழ்க்கையை நடத்துகிறாள்.**

ஆணுக்கொருவகை உணவுக் கவனிப்பும் பெண்பிள்ளை என்பதால் குறைந்தளவு உணவுக் கவனிப்பும் இருக்கின்ற குடும்பங்களும் அதிகமாய் இருக்கின்றன. ஆண்பிள்ளைக்கு முட்டைப் பொரியலும், பெண்பிள்ளைக்கு சட்டியில்போட்டு குழைத்த வெறும்சோறும் கொடுக்கின்ற பெற்றோரும் இருக்கின்றார்கள்.

தேசிய இனத்தைப் பெறுதல், மாற்றுதல், நிறுத்தி வைத்தல் என்பவற்றிற்கு ஆண்களுடன் சமமான உரிமைகளை வழங்குதல் வேண்டுமென உறுப்புரை 9இல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எமது சமுதாயத்தில் இனத்துவத்துக்கான சமவுரிமை பெண்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டதாகவே இன்றும் இருக்கிறது. எமது பகுதிகளில் தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என மூவினத்தைச் சார்ந்தவர்களும் கலந்து வாழ்வதால் பெரும்பாலாக காதல் திருமணங்கள் இனம் மாறி நடைபெறுகின்றன.

இன்றைய தலைமுறையானது தத்தமது இனத்துவத்தை பேணி வாழ விரும்பினாலும் சமுதாயம் பெண்ணின்மீது மட்டும் அழுத்தங்களை பிரயோகிக்கிறது. ஒரு தமிழ்ப் பெண் சிங்கள இனத்து ஆணைத் திருமணம் புரிந்தாலோ இஸ்லாமிய இனத்து ஆணைத் திருமணம் செய்தாலோ, அப்பெண் தன் கணவனின் இனத்தைத் தழுவிக்கொள்ள வேண்டியவளாகவே கட்டாயப்படுத்தப்படுகிறாள். அது அவளது பெற்றோராலோ அவள் சார்ந்த சமூகத்தாலோ அவளது கணவனாலோ மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தங்களாகவே இருக்கின்றன. ஓர் ஆணால் தன் இனத்துவத்தைக் காப்பாற்ற முடிகின்ற அதேவேளை ஓர் பெண்ணாலும் அது இயன்றதாகவே இருக்க வேண்டும் என்பது பெண்கள் உரிமையாக உலகளாவிய ரீதியில் இருந்தாலும் கூட எமது சமுதாயத்தில் பெண்ணாகப் பிறந்திருப்பதாலேயே அவள் அவளது இனத்துவத்துக்கான உரிமையைப் பெறுவதில் மறுக்கப்படுகின்றாள்.

உதாரணத்திற்கு ஓர் தமிழ்ப் பெண்ணையோ அல்லது சிங்களப் பெண்ணையோ திருமணம் செய்து கொண்ட ஆண் அவளைத் தன் இனத்துவத்தைப் பேணுகின்ற உரிமையையோ அல்லது அப்பெண்ணின் இனத்துவத்தை மாற்றாமலாவது வாழக்கூடிய உரிமையையோ வழங்குவதில்லை. ஒரு இஸ்லாமிய ஆணையோ, ஒரு சிங்கள இனத்து ஆணையோ திருமணம் செய்த தமிழ்ப்பெண்ணினால் தான் பெற்றெடுத்த குழந்தைக்குத் தனது இனம் சார்ந்த பெயரைச் சூட்டவோ அல்லது தனது இனம் சார்ந்து வளர்த்தெடுப்பதோ முடியாத காரியமாகிப் போகிறது. அவ்வளவு ஏன் அவள் கட்டாயமாகத் தான் மணம் புரிந்த ஆணின் இனத்தைப் பின்பற்ற வேண்டிய

கடமைப்பாடு உடையவளாக மாற்றப்படுகிறாள். சமுதாயத்தின் கருத்து ஆணின் நலம் சார்ந்தே இருப்பதால் பெண்ணின் உரிமை மீறப்படுவது பற்றி இங்கு எவருக்கும் ஆட்சேபனை இருப்பதாகத் தெரியவில்லை. அதேவேளை அரசாங்கமும் இந்த இனத்துவத்தைப் பேணுகின்ற உரிமையைப் பெண்ணுக்கு வழங்குவதில் அக்கறை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

குடும்பத் தொடர்புகளிலான பேதங்காட்டல்களை ஒழித்தல் பற்றி இணக்க உடன்படிக்கையில் *உறுப்புரை 16* இல் சொல்லப்பட்டாலும் எமது சமுதாயத்தில் அதைப் பற்றிய எந்தக் கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்தவொரு நபரினதும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகாமல் தனக்கான துணையைத் தெரிவு செய்வதற்கான உரிமை எல்லாப் பெண்களுக்கும் கிடைப்பதில்லை. ஒரு சிலருக்கு அது சாத்தியப்பட்டாலும் பெரும்பாலான பெண்கள் தாம் தெரிவு செய்த துணையுடன் வாழ்வதற்கான குடும்ப அங்கத்தவர்களின் மறுப்புக் காரணமாக வீட்டைவிட்டு ஓடிப்போக வேண்டியவளாகிறாள். அதன் காரணமாக அவளது பாதுகாப்புக் கேள்விக் குறியாகிறது. பலவேளைகளில் ஓடிப்போனவள் ஏமாற்றப்பட்டவளாக மீண்டும் சமுதாய சாக்கடையில் தூக்கி வீசப்படுகிறாள். அல்லது அப்படி வீசப்பட்டுவிடக்கூடாதே என்ற அச்சத்தில் தனது கணவனுக்குக் கட்டுப்பட்டவளாய் தன் சுதந்திரங்களையும் உரிமைகளையும் தியாகம் செய்துவிட்டு நடைப்பிணம்போல வாழ்க்கையை நடத்துகிறாள்.

அதைப் போலவே தமது பிள்ளைகளின் கல்வி விடயங்களிலும் சரி, அவர்களது வாழ்க்கை தொடர்பான விடயங்களிலும் சரி பெண்ணின் ஆலோசனைகள் கேட்கப்படுவதில்லை. அப்படி கேட்கப்பட்டாலும் அவை இரண்டாம்பட்சமாகவே கருதப்படுகின்றன. பொதுவாக ஆண் எடுக்கின்ற முடிவுகளின் பிரகாரமே பிள்ளைகளின் நடவடிக்கைகள் அமைகின்றன. அது தவறு என்று தெரிந்தாலும்கூட ஒரு தாயாகப்பட்ட பெண்ணால் கூட தன் பிள்ளைக்கு ஆலோசனை சொல்லவோ வழிகாட்டவோ முடிவதில்லை. தந்தையின் முடிவே உறுதியானதும் இறுதியானதுமாக எமது சமுதாயத்தில் இருப்பதே இதற்குக் காரணமாகிறது.

**பெண்களுக்கெதிரான பேதங்காட்டல்களும் வன்முறைகளும் ஒழிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம்**

■ பெண்களுக்கெதிரான பேதங்காட்டல்களும் வன்முறைகளும் இல்லாது ஒழிக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும். பொதுவான உளப்பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய, பெண்களை இரண்டாம் நிலைப் பிரஜைகளாக்குகின்ற இப்பிரச்சினைகளால் பெண்கள் மட்டுமல்ல ஒரு சமூகமே பாதிக்கப்பட்டு அது அந்த நாட்டினதும் இந்த உலகத்தினதும் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதால் அனைத்துப் பேதங்காட்டல்களும் வன்முறைகளும் தவிர்க்கப்படல் அவசியமாகின்றது.

■ குடும்பத்தில் பெண்ணின் கல்வியிலும் அக்கல்வியை கடமையிலும் வேலைகளிலும் அதாவது உழைப்பிலும் தாராளமாக பிரயோகிக்க மறுப்பதும் அல்லது ஊதியக்குறைப்பால் அவர்களை அவர்களே கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளும் நிலமையை உருக்குவதும் பெண்ணுக்கும் அவள் சார்ந்த கௌரவத்திற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அவை மீதான பார்வையும் அவ்வாறான பாகுபாடுகளை இல்லாதொழிக்க வேண்டிய தேவையும் உண்டு.

■ பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் ஒரு பெண் கொடுமைக்கும் அச்சத்துக்கும் ஆளாகுவதுடன், அவளது சுகாதாரத்துக்கு ஆபத்தும் ஏற்படுகின்றது. பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாகும் பெண்களின் உடலில் பலவித உபாதைகள் ஏற்படுவதாக உளநலவியலாளர்கள் பலர் ஆராய்ந்து அறிந்து அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளார்கள்.

- இரப்பையில் குழப்பம்
- கொடுப்பு இறுக்கம்
- பல் நெரித்தல்
- நரம்புத் தாக்கம்
- தலைவலி
- நித்திரையின்மை
- களைப்பு
- அருவருப்பு உணர்வு
- உணவில் விருப்பமின்மை
- உடல்மெலிவு
- அடிக்கடி அழுதல்

மேற்குறிப்பிட்ட தாக்கங்களால் பெண்களின் ஆரோக்கியம் மோசமாகப் பாதிக்கப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ள முடியும். பாலியல் தொல்லையானது பாதிப்புக்கு ஆளாகும் பெண்களிடத்தில் சோர்வு, தீவிர மனச்சிக்கல் போன்றவற்றையும் ஏற்படுத்துகிறது. கோபம், பயம், மனச்சோர்வு, எரிச்சல், மன விகாரம், சுய மதிப்பிழப்பு, தாழ்வு மனப்பாங்கு, மனக்குழப்பம் மற்றும் யாருடைய உதவியுமில்லாமல் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வு, எளிதில் தாக்கப்படக்கூடும் என்ற எண்ணம் முதலியன பெண்களின் மதிப்பையும் கௌரவத்தையும் அடியோடு சாய்த்து விடவல்லன. இவற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட பெண்சார்ந்த குடும்பத்திற்கும்

சமூகத்திற்கும் அவள் சார்ந்த நாட்டுக்கும் எப்பயனும் அற்றுப்போகும் வாய்ப்புகளும் இருக்கின்றன. மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக ஆகும் பெண்களையும் காணக் கூடியதாக உள்ளது. அதிகம் பேசாதவர்களாகத் தமது எதிர்ப்புணர்வுக்குப் பூட்டுப் போட்டுக் கொள்ளும் பெண்களே அதிகமாக மனநோயாளர்கள் ஆகின்றார்கள். ஆகவே பெண்களின் ஆரோக்கியம் சுகவாழ்வு பற்றி கவனத்தில் கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

## பேதங்காட்டல்கள் ஒழிக்கப்பட வேண்டிய முறைகளாவன

பெண்களுக்கான உரிமைகளை மதிக்கின்ற சமுதாய விழிப்புணர்வை தாராளமாகப் பரப்புதல் வேண்டும்.


■ ஒரு பெண்ணின் வாழ்வாதாரத்துக்காகவோ அல்லது இன்றியமையாத பொருளாதார அவசியத்துக்காகவோ பெண்கள் தம்மீது மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் சுரண்டல்களை கண்டும் காணாமல் இருக்கின்றார்கள். அப்படியின்றி அவற்றை எதிர்க்கவும், தடுக்கவும் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெண்களுக்கெதிரான பேதங்காட்டலானது பெண்ணின் பிரச்சினை மட்டுமல்லாது மனித உரிமை மீறல் பிரச்சினையாகும் என்பதனை தேசத்தின் சட்டங்களும் பெண்ணுரிமை நிறுவனங்களும் கோவைகளிலே மட்டும் வைத்திருக்காமல் நடைமுறை வாழ்க்கையிலே அவற்றைப் பிரயோகித்து பெண்களுக்கான சமத்துவத்தை வழங்க வேண்டும்.

ஏற்றத்தாழ்வு மனநிலையின் அடிப்படையிலும் ஆணுக்கு இவை பெண்ணுக்கு இவை என அங்கீகரிக்கப்பட்டு இன்னமும் மாற்றம் பெறாமல் இருந்து வரும் நடைமுறைகளினாலும் மூடநம்பிக்கைகளாலும் ஏற்பட்டிருக்கும் தப்பபிப்பிராயங்களையும், கண்டனங்களையும் தட்டிக் கழித்தல் நடவடிக்கைகளையும் நீக்குவதற்காக சமூக மற்றும் கலாசார மனப்பாங்குகளை விருத்தி செய்ய ஊக்கமளித்தல் வேண்டும்.

மிக முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவர்களான விதவைகள், மணவிலக்குப் பெற்ற பெண்கள், தனிப்பெற்றோர், தனித்து வாழும் பெண்கள், பாதிப்புறக்கூடிய ஏனைய வகைக்குள் அடங்குகின்ற பெண்களைப் பற்றிய எதிர்விளைவுகளைத் தரும் சமூக மனப்பாங்குகளை நீக்குவதற்கு சமுதாயத்தை பொறுப்பாக்குதல் வேண்டும். இவ்வகையான பெண்களுக்கு சமூக பொருளியல் ரீதியாக ஓரங்காட்டப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கமும், பெண்கள்சார் அமைப்புகளும், சமூக அமைப்புகளும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

***சந்திரகலா***



இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள உள்ள யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, புத்தளம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 2011 தை, மாசி மாதத் தொடக்கத்தில் நடாத்தப்பட்ட ஆய்வை ஆதாரமாகக் கொண்டவையாக இக்கட்டுரை அமைகின்றது. குறிப்பிட்ட ஆறு மாவட்டங்களும் கடந்த மூன்று தசாப்த காலமாக யுத்தத்தின் பேரழிவினைச் சந்தித்துள்ளன. இம்மாவட்ட மக்கள் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது நடைபெற்ற கோரமான நிகழ்வுகளுக்கு சான்றாக இருந்து வருகின்றனர்.



By Amantha Perera - IPS | The Irrawaady
http://www.jdslanka.org/2011/05/for-sri-lankan-women-war-for-survival.html

# இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெண்களின் நிலை

இங்கு வாழ்கின்ற மக்கள் மிக மோசமான மனஅதிர்ச்சி வடுவிற்கு உள்ளாகியிருப்பதுடன் தமது நாளாந்த வாழ்க்கையினைக் கொண்டு நடாத்த முடியாத நிலையில் இருப்பதாகப் பலரும் தெரிவிக்கின்றனர். "முன்பு 3000 குடும்பங்கள் இருந்தால் குறைந்தது அக்குடும்பங்களில் 10,000 உறுப்பினர்களாவது இருப்பார்கள். இப்பொழுது தம் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப தனிநபர்கள் மாத்திரமே முயற்சி செய்து வருகின்றனர்" யுத்தத்தினாலும் அல்லது கடத்தல்களினாலும், பலவந்தமாக இடம்பெற்ற ஆட்சேர்ப்புகளினாலும், காணாமல் போதலினாலும், படுகொலைகளினாலும், தடுத்து வைப்பினாலும் அல்லது யுத்தத்தில் பாதிக்கப்பட்டதாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள குடும்பங்களில் பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் குறைந்தது ஒரு உறுப்பினரையாவது ஒவ்வொரு குடும்பமும் இழந்திருக்கின்றது என்பது உண்மைக்குப் புறம்பான ஒன்றல்ல. வன்முறையானது இம்மாகாணங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது எனலாம். சமூகமானது அதன் இழப்புகளுக்கு இன்னும் ஈடுகொடுக்க முடியாமலிருக்கின்றது என்பதற்கான அறிகுறியாகவே அது காணப்படுகின்றது. சமுதாயமானது சிதைவுண்டு செயலற்றுக் காணப்படுவதுடன் தாம் முகங்கொடுக்கின்ற பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு, மக்கள் ஒருவர் மீது மற்றவர் தங்கியிருக்கின்ற நிலையே காரணமாகக் காணப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து இண்டரை வருடங்களாகியுள்ள போதிலும் மோதலானது இன்னும் முடிவடையவில்லை.

**ஆற்றுப்படுத்தலுக்கான தேவைகளையுடையவர்களாக மக்கள் இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருவதானது அரசாங்கமானது சில அட்டூழியங்களைத் தொடர்ந்தும் மறைக்க விரும்புகின்றது என்பதையும் ஏற்கனவே சிதைந்த மன அதிர்ச்சி வடுவிற்கு உள்ளாகியுள்ள ஒரு சமுதாயத்தை மேலும் சிதைக்க விரும்புகின்றது என்பதையும் நாம் நம்பவே வழி செய்கின்றது. முதலீடுகளும் அபிவிருத்தியும் அதிகரித்துக் காணப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே வடக்கு மற்றும் கிழக்கினைச் சேர்ந்த மக்கள் ஒரு ஜனநாயக தேசத்திலே வாழுகின்ற அனுபவத்திலிருந்து முனைப்பாகப் புறந்தள்ளி வைக்கப்பட்டு வருகின்றனர்.**

சிங்கள பௌத்த பாசிசத்தினை இலங்கை அரசாங்கம் தெளிவாக இம்மாகாணங்களில் புகுத்தி வருவதுடன் சிறுபான்மையினரின் தளங்களையும் அது அபகரித்து வருகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரும்பாலும் இந்து, கிறிஸ்தவ, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களையே கொண்டுள்ளன. எவ்வாறாயினும் இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு அந்த ஆலயங்கள் காணப்பட்ட இடங்களிலே முற்று முழுவதுமாகப் புத்தரின் சிலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. யுத்தத்தின் பின்னர் கூட சோதனைச் சாவடிகள் மற்றும் இராணுவத்தினரின் தொகை குறைக்கப்படவில்லை.

## புள்ளி விபரம்

அவசரகாலச் சட்டத்தின் விதிகள் அமுல்படுத்தப்படுவது தெற்கிலே உணரப்படாத அதேவேளை, வடக்கிலும் கிழக்கிலும் அது நாளாந்த வாழ்க்கையினைப் பாதித்து வருகின்றது. அதிகரித்த இராணுவப் பிரசன்னமும் அவசரகாலச் சட்டமும் இணைந்து கொண்டுள்ளதால் வடக்கிலும் கிழக்கிலும் மக்களினால் ஒன்றுகூட முடியாத நிலை காணப்படுவதுடன் எதிர்ப்புகளைத் தெரிவிப்பதற்குக் கூட அங்கே அச்சம் நிலவுகின்றது. சம்பளத்தை அதிகரிக்கக் கோரியும் தொழில் வாய்ப்பினை வழங்குமாறும் பல்வேறு கரிசனைகளை எழுப்பித் தெற்கிலே அண்மைய மாதங்களிலே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதை நாம் கண்டுள்ள போதிலும், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்கள் இவ்வாறு தமது ஜனநாயக உரிமையினைப் பயன்படுத்த முடியாத நிலையிலேயே இருக்கின்றனர். மக்கள் ஒன்று கூடுவதற்கோ அல்லது கரிசனைகளை எழுப்புவதற்கோ அனுமதி மறுக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். அதிகமான கூட்டங்களிலே இராணுவ ஆளணியினர் கலந்து கொள்கின்றனர். உதாரணமாக சன்னாரிலே (மன்னார் மாவட்டம்) முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலே காணித்தகராறு ஒன்று ஏற்பட்டபோது மத்தியஸ்தத்திற்கு அரசியல்வாதிகள் இராணுவ பிரிகேடியர்களையே அழைத்து வந்தனர். சிவில் நிர்வாகமானது அப்பட்டமாகவும் மறைமுகமாகவும் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

கிராமங்களின் தேவைகளை மதிப்பிடுவதற்கான கிராமியக் கூட்டங்களில் இராணுவம் கலந்து கொண்ட பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் குற்றச்செயல்கள் சம்பந்தமாக முதலிலே இராணுவத்திற்கு முறைப்பாடு செய்யாவிட்டால் அந்த முறைப்பாட்டினை ஏற்றுக் கொள்வதற்கு பொலிசார் மறுத்துள்ளதுடன் இராணுவத்திடமிருந்தே பொலிசாருக்கு முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ள நிலைமைகள் காணப்படுகின்றன. தாம் அதிகாரமற்றிருப்பதாகவும் மக்களின் பிரச்சினைகளை

> **“அண்மைய மாதங்களிலே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதை நாம் கண்டுள்ள போதிலும், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்கள் இவ்வாறு தமது ஜனநாயக உரிமையினைப் பயன்படுத்த முடியாத நிலையிலேயே இருக்கின்றனர். மக்கள் ஒன்று கூடுவதற்கோ அல்லது கரிசனைகளை எழுப்புவதற்கோ அனுமதி மறுக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். அதிகமான கூட்டங்களிலே இராணுவ ஆளணியினர் கலந்து கொள்கின்றனர். உதாரணமாக சன்னாரிலே (மன்னார் மாவட்டம்) முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலே காணித்தகராறு ஒன்று ஏற்பட்டபோது மத்தியஸ்தத்திற்கு அரசியல்வாதிகள் இராணுவ பிரிகேடியர்களையே அழைத்து வந்தனர். சிவில் நிர்வாகமானது அப்பட்டமாகவும் மறைமுகமாகவும் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகின்றது.”**

இராணுவத்தினர் தீர்க்கின்ற ஒரு நிலைமை காணப்படுவதாகவும் சமூகப் பணியாளர் ஒருவரிடம் பொலிசார் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். பாலியல் வல்லுறவாயினும், கொலையாயினும், காணாமல் போதலாயினும் கடத்தலாயினும் அதனை பொலிசாரிடம் முறையிடுவதில் எவ்வித பயனும் இல்லை என்கின்ற உணர்வே வட கிழக்கு மாவட்டங்களிலும் காணப்படுகின்றது. இவ்வாறு முறையிடுவதனால் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதற்கான வாய்ப்பு அதிகரிக்கப்படுவதுடன் மக்களின் வாழ்க்கையிலே இராணுவம் நுழைவதற்கும் அது வழியினை ஏற்படுத்துகின்றது. தற்பொழுது நிலவுகின்ற சமாதானமானது LTTEயினைத் தோற்கடித்ததால் மட்டும் ஏற்பட்ட ஒன்றல்ல, மாறாக மக்களின் சுயநிர்ணயம், கௌரவம் ஆகியவற்றிற்கான கோரிக்கைகளைத் தோற்கடித்ததனாலும் ஏற்பட்டது என்பதை இப்பொழுது புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இராணுவ யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வந்த மாதங்களில் சிங்கள பௌத்தர்களின் வெற்றிக்கான செய்தியானது தெளிவானது என்பதை இலங்கை அரசு உறுதிப்படுத்தியது. இராணுவ ஆளணியினரில் அதிகம் தமிழர்கள் இல்லாமல் இருக்கின்றனர். தமிழ் இனத்தைச் சேர்ந்த 1000 பொலிசார் அண்மையிலே பதவிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான கொலைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும், காணாமல் போதல்களுக்கும் பொறுப்பாக இருக்கின்ற இவ்வாறானதொரு இராணுவத்தினை நம்புமாறு சிறுபான்மை இனத்தினைக் கோருவது சாத்தியமற்ற ஒன்றாகும். வடக்கு மற்றும் கிழக்கில் சமாதான காலத்திலே இவ்வாறான அதிகரித்த ஓர் இராணுவப் பிரசன்னத்தைப் பேணிவருவதென்பது சந்தேகத்துக்குரிய ஒன்றாகவே இருந்து வருகின்றது.

சமுதாயத்துடன் சேர்ந்து பணியாற்றுவதற்கு நிறுவனங்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதும், விசேடமாக அவர்களுக்கு உளசமூக உதவியினை வழங்குவதற்கு அனுமதி மறுக்கப்படுவதும் கரிசனைக்குரிய ஒன்றாக இருந்து வருகின்றது. ஆற்றுப்படுத்தலுக்கான தேவைகளை உடையவர்களாக மக்கள் இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருவதானது அது சில அட்டூழியங்களைத் தொடர்ந்தும் மறைக்க விரும்புகின்றது என்பதையும், ஏற்கனவே சிதைந்த மன அதிர்ச்சி வடுவிற்கு உள்ளாகியுள்ள ஓர் சமுதாயத்தை மேலும் சிதைக்க விரும்புகின்றது என்பதையும் நாம் நம்பவே வழி செய்கின்றது. முதலீடுகளும் அபிவிருத்தியும் அதிகரித்துக் காணப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே வடக்கு மற்றும் கிழக்கினைச் சேர்ந்த மக்கள் ஒரு ஜனநாயக தேசத்திலே வாழுகின்ற அனுபவத்திலிருந்து முனைப்பாகப் புறந்தள்ளி வைக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களிலே கைது செய்யப்படுவதற்கும், சித்திரவதை செய்யப்படுவதற்கும் படுகொலை செய்யப்படுவதற்குமான சாத்தியங்களும் அச்சங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பலரும், செயற்படுநர்களும் நிறுவனங்களும் இவ்வாறான தகவல்களைத் தருவதற்கு தயக்கம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இராணுவத்தினரினால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் முகங்கொடுக்க நேரிடும் என அஞ்சுகின்ற பின்விளைவுகளின் காரணமாக பெயர்கள் போன்ற உண்மைச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருந்தது. பல சம்பவங்களில் முறைப்பாடு செய்த பெண்கள் வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளனர்[1]. பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய முத்திரை குத்தல்களும், எண்ணிக்கைகளையும் மற்றும் பெயர்களையும் சேகரிப்பதில் தடைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கும் ஆற்றுப்படுத்தலினை மேற்கொள்வதற்கும் தகவலினைச் சேகரிப்பதற்கும் நிறுவனங்களை அணுகக்கூடியதாக இருப்பதுவும், ஆற்றல் பெறுவதும் தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற இராணுவப் பிரசன்னத்தினாலும் ஜனாதிபதி செயலணியினாலும் (ஜனாதிபதி செயலணியானது வடக்கிலியங்கும் NGOக்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளதுடன் இதன் தலைவராக ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷ விளங்குகின்றார். அத்துடன் இச்செயலணியின் உறுப்பினர்களில் அதிகமானவர்கள் ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்களாக இருக்கின்றனர்) தடுக்கப்பட்டன.

தீர்மானம் மேற்கொள்கின்ற அதிகாரங்கள் ஆண்களின் கைகளிலேயே காணப்படுகின்றன. அதுவும் அதிகமாக அரசியல்வாதிகளின் கைகளிலேயே காணப்படுகின்றன. தீர்மானம் வகுத்தல் அமைப்புகளில் ஓரங்கமாக இருப்பதற்கு பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சமுதாயம் தொடர்பான விடயங்களில் தீர்மானம் வகுப்பதற்கான அதிகாரத்தையோ அனுமதியினையோ

பெண்கள் கொண்டிருப்பதில்லை. பெண்களுக்குப் போதியளவு உதவிக் கட்டமைப்புகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் கட்டமைக்கப்பட்டு ஏற்கனவே இருந்து வருகின்ற அதிகாரமட்ட நிலைகள் போதிய உதவியின்மை மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை போன்ற தற்போதைய சூழமைவினால் மேலும் வலுப்படுத்தப்படுகின்றன. மக்கள் திரும்பி வரும் பிரதேசங்களில் மற்றும் IDP முகாம்களில் உள்ள அதிகமான ஆண்கள் மதுபானத்திற்கு அடிமையாகின்றனர். உரிய உதவியின்மையினாலும் வாழ்க்கையானது சகல அம்சங்களினாலும் சிதைக்கப்பட்டிருப்பதாலும் தாம் விரக்தியுற்றிருப்பதாகவும் அதனாலே தாம் மதுவுக்கு அடிமையாகியிருப்பதாகவும் அவர்கள் சமாதானம் கூறுகின்றனர். இது பதிலாகப் பெண்களின் வாழ்க்கையினைப் பாதிக்கச் செய்கின்றது.

மோதலின் போது பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களைப் பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் தொழிலில் இருந்து பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி மற்றும் தீர்மானம் மேற்கொள்கின்ற அமைப்புகளில் பெண்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசினைக் கோருகின்ற SCR 1325 இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்படுகின்றது.

ஆயுத மோதலின்போது பெண்களுக்கு எதிராகவும் சிறுவர்களுக்கு எதிராகவும் இழைக்கப்படுகின்ற பாலியல் வல்லுறவு உள்ளிட்ட வன்முறைகளைக் கண்டிக்கின்ற SCR 1820 இன் வேண்டுகோளைத் தாண்டியும் இவ்வாறான செயற்பாடுகளை நிகழ்த்துகின்ற ஆயுதமோதலில் ஈடுபட்டுள்ள அனைவரும் இச்செயற்பாடுகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள போதிலும், இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதுடன் சில சூழ்நிலைகள் முறைமை வாய்ந்ததாகவும் பரவலாக நடைபெற்று வருபவையாகவும் மாறியுள்ளதுடன் இவை மிகக் கொடூரமான மட்டங்களையும் எட்டியுள்ளன. மோதலினைத் தடுப்பதிலும் அதற்குத் தீர்வு காண்பதிலும் பெண்களின் பங்கேற்பு மற்றும் பூரண ஈடுபாடு ஆகியவற்றிற்கு வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் பாகுபாடு ஆகியவற்றின் காரணமாகத் தொடர்ச்சியாக இருந்து வருகின்ற தடைகள் மற்றும் சவால்கள் ஆகியவை பற்றிய ஆழமான கரிசனைகளைப் பகிர்ந்தவாறு அது மோதலுக்குப் பின்னரான பொது வாழ்வில் பெண்கள் பங்குபற்றுவதற்கான அவர்களின் ஆற்றல் மற்றும் நியாயமான உரிமை ஆகியவற்றினைச் சீர்குலைக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்வதுடன் இது மோதலுக்குப் பின்பான சமாதான உருவாக்கம் உள்ளிட்ட நீடுறுதியான சமாதானம் பாதுகாப்பு மற்றும் மீளிணக்கம் ஆகியவற்றிலும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதையும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

இலங்கை அரசாங்கம் குற்றவாளியாக இருக்கின்ற பாலியல் வல்லுறவு, வலிந்து மேற்கொள்ளப்பட்ட காணாமற்போதல் மற்றும் சித்திரவதை மற்றும் குற்றச்செயல்கள் ஆகியவற்றினை மானுடத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் என வரையறை செய்கின்ற ரோம நியதிச் சட்டத்தின் உறுப்புரை 7 இனை இத்தருணத்தில் நாம் நினைவில் கொள்கின்றோம்.

இலங்கையிலே ஆயுதமோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ள போதிலும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பெண்கள் அவர்களின் வாழ்வினில் சிறு மாற்றங்களையே கண்டுள்ளனர். கடந்த இரண்டு வருடங்களில் அவர்களது பாதுகாப்பு குறைவடைந்துள்ளது எனக் குறிப்பிடுவது உண்மைக்குப் புறம்பான ஒன்றல்ல. அதிகரித்து வரும் இராணுவமயமாக்கம் மற்றும் சட்டஆட்சி இல்லாமை மற்றும் குற்றத்தை நிகழ்த்திவிட்டுத் தண்டிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவது ஆகியவையே இவ்வாறு அவர்களின் பாதுகாப்புக் குறைவடைவதற்கு பங்களிப்பு வழங்கியுள்ளது. 2009 ஆம் ஆண்டு முடிவடைந்த கோரமான யுத்தத்தின் கடைசி நாட்களில் மெனிக்பாம் போன்ற முகாம்கள் அமைக்கப்பட்டு பேணப்பட்டு வந்ததுடன் இந்த நிலைமை ஆரம்பமானது. வடக்கிலுள்ள மக்களின் நாளாந்த வாழ்க்கையினை இராணுவ மயமாக்கியமையானது பெண்களின் பாதுகாப்பிற்குக் கணிசமான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. இது பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வல்லுறவு போன்ற பிரச்சினைகளை அதிகரித்திருக்கின்றது. வன்முறைச் சம்பவம் நிகழ்ந்தும் கூட அந்த விடயத்தினைப் பொலிசாருக்கு எடுத்துக்கூற முடியாமல் இருப்பதாக நேர்காணப்பட்ட பலர் குறிப்பிட்டனர். இதற்கான காரணம், இவ்வாறு பொலிசாரிடம் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகள் இராணுவத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதனாலேயாகும்.

பெண்கள் முறைப்பாடு செய்வதற்கு அஞ்சுகின்றனர். குறிப்பாக GBV தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு அஞ்சுகின்றனர். ஏனெனில் இவ்வாறு முறைப்பாடு செய்வதனால் அவர்கள் இராணுவத்துடன் தொடர்புபட

> **மன்னார் மாவட்டத்தில் முசலி மற்றும் மாந்தைப் பிரதேசங்களில் மீளக்குடியேறியுள்ள பெண்கள் இராணுவ சோதனைச் சாவடிகளிலும் அவற்றிற்கு அண்மையிலும் துன்புறுத்தலுக்கு உள்ளாவது பற்றி முறைப்பாடு செய்திருக்கின்றனர். இவர்கள் தனியே பயணம் செய்வதற்கு அஞ்சுவதுடன், விசேடமான ஆண்துணையின்றித் தனியே பயணம் செய்வதற்கும் அஞ்சுகின்றனர்.**

வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்பதாலாகும். ஏனெனில் அதிகமான சந்தர்ப்பங்களில் இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு அதுவே காரணமாக இருந்திருக்கின்றது. பலசம்பவங்களை முன்கொண்டு வருவதற்கு இதுவொரு தடையாக இருந்து வருவதுடன் மோதலின் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை வெளியே தெரியச் செய்வதற்கு பெண்கள் மத்தியில் பாரிய தயக்கம் காணப்படுகின்றது.

யுத்தத்தின் போதும் அதன் முடிவின் போதும் பெண்கள் செலுத்த வேண்டியிருந்த பாரிய விலை அவர்களது குடும்ப உறுப்பினர்களை இழக்க வேண்டியிருந்ததுவும், ஆண் துணையினை இழக்க வேண்டியிருந்ததுவுமாகும். இது அவர்களை மரபுவாய்ந்த குடும்பக் கட்டமைப்பிலிருந்து தள்ளி விட்டிருக்கின்றது. இதனால் அவர்கள் துஷ்பிரயோகத்திற்கு இலகுவில் ஆளாகும் ஒரு நிலைமை காணப்படுகின்றது. சமுதாயம் சிதைவடைந்த நிலைமையும் காணப்பட்டு வருகின்றது. அத்துடன் ஒன்று சேர்ந்து வாழ்கின்ற உணர்வில்லாத காரணத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு சமூகங்கள் இவ்வாறு சிதைவுற்றுக் காணப்படுகின்றன. இதன் காரணமாக வன்முறை அதிகரித்துக் காணப்படுவதுடன், குறிப்பாகப் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்துக் காணப்படுகின்றது.

## பால்நிலை அடிப்படையிலான வன்முறை

கடந்த இரண்டு வருடங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் சடுதியாக அதிகரித்துள்ளன. தற்பொழுது பெண்களினால் சட்ட முறைமைகளையும் நிறுவனங்களையும் அணுக முடிகின்றது என்கின்ற ஒரு விடயத்தினையிட்டு நாம் திருப்தியடையக் கூடியதாக இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் பொலிசார் செயற்படாமல் இருக்கின்ற காரணத்தினால் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான குற்றத்தை இழைப்போர் சட்டத்தின் பிடியில் இருந்தும் தப்பி வாழ்கின்றனர் என்ற உணர்வு சமுதாயத்தின் மத்தியில் நிலவி வருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் முசலி மற்றும் மாந்தைப் பிரதேசங்களில் மீளக்குடியேறியுள்ள பெண்கள் இராணுவ சோதனைச் சாவடிகளிலும் அவற்றிற்கு அண்மையிலும் துன்புறுத்தலுக்கு உள்ளாவது பற்றி முறைப்பாடு செய்திருக்கின்றனர். இவர்கள் தனியே பயணம் செய்வதற்கு அஞ்சுவதுடன் விசேடமான ஆண்துணையின்றித் தனியே பயணம் செய்வதற்கும் அஞ்சுகின்றனர். தனித்த பெண்களும் தனியே பெண்களைக் கொண்டுள்ள குடும்பங்களுமே இவற்றினால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மீள் குடியேற்றப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழ்கின்ற குடும்பங்கள் தீவிர இராணுவக் கண்காணிப்புக்கு உள்ளாகின்றனர். அவர்களுடைய நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன. 24 வயதுடைய தமிழ்ப் பெண்ணொருவர் குறிப்பிடுகையில் "நாங்கள் LTTE கட்டுப்பாட்டிலே பல வருடங்கள் வாழ்ந்த காரணத்தினால் இராணுவத்தினருடன் வாழ்ந்து எமக்குப் பழக்கமில்லை. நாங்கள் எப்பொழுதுமே அவர்களினால் அச்சுறுத்தப்படுகின்றோம். எமக்கு இராணுவம் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை. இப்பொழுது அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வாழ்வது மிகவும் கடினமாக உள்ளது. நாங்கள் எதையும் செய்வதற்கு அச்சப்படுகின்றோம். வெளியில் இருந்து வருகின்ற அச்சுறுத்தல்களில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்கு எமக்கு உரிய வீடுகள் இல்லை. ஒரு கதவினைப் போட்டு பூட்டினைப் போட்டு ஜன்னல்களைத் திருத்துவதற்கு எம்மால் முடியாமலிருக்கின்றது. இவ்வாறு செய்தால் எங்களுக்கு எமது வீட்டினுள் பாதுகாப்பாக இருக்க முடியும். தற்பொழுது அதிகமான வீடுகள் சேதமடைந்து காணப்படுகின்றன. ஏனெனில், வீட்டுச் சுவர்கள் பாரமற்ற மரப்பலகைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதாலும் பாதுகாப்பாகப் பூட்டக்கூடிய கதவுகள் இல்லாமையாலும் ஆகும். யாருக்கும் நினைத்த நேரத்தில் வீட்டிற்குள் வரமுடியும். தமது வீட்டின் எந்த எச்சமும் இல்லாது கூடாரங்களில் வாழுகின்ற பெண்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது.[1]



By Gibson Bateman | Foreign Policy in Focus
http://www.jdslanka.org/2011_11_16_archive.html

மன்னார் மாவட்டத்திலே பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது மூன்று மடங்கு அதிகரித்துள்ளது[2]. திருகோணமலையிலே பெண்கள் நிறுவனமொன்று மாதாந்தம் குடும்ப வன்முறை தொடர்பாக 4 முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளது. மோசமான வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சம்பந்தப்பட்ட 4 – 6 சம்பவங்கள் தமக்கு முறைப்பாடு செய்யப்படுவதாக கிளிநொச்சி வைத்தியசாலை தெரிவித்துள்ளது. இன்னுமொரு சம்பவத்திலே கிளிநொச்சியிலே கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவரின் கணவர் அப்பெண்ணுக்கு மண்ணெண்ணையினை ஊற்றி தீக்கொழுத்தியிருக்கின்றார்[3]. இப்பெண்ணின் உடலின் அரைப்பகுதி எரிந்துவிட்ட நிலையிலும் கணவன் இன்னும் கைது செய்யப்படாமல் தப்பி வாழ்கின்றார். தன்னால் இத்தொழிலினை விட்டு விலக முடியாது என்று கூறிய அப்பெண் தனக்கு கண்ணிவெடிகளை அகற்றும் தொழிலானது நல்ல சம்பளத்தை வழங்குகின்ற காரணத்தினால் அதனை செய்யாது விட்டால் தன்னால் தனது மூன்று பிள்ளைகளையும் பராமரிக்க முடியாமல் போய்விடும் என்கின்ற அச்சத்தினைத் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த ஆறு மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் இளம்பெண்கள் சம்பந்தப்பட்ட 29 மரணங்கள் அறிக்கையிடப்பட்டிருக்கின்றன. இந்த மரணங்களில் அதிகமானவை கொலைகளாகவோ அல்லது தற்கொலைகளாகவோ இருப்பதாக யாழ்ப்பாண வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.[4]

இலங்கை அரசாங்கமானது 2005 ஆம் ஆண்டிலே வீட்டு வன்முறைச் சட்டத்தினை இயற்றி நிறைவேற்றியுள்ளது. இது பெண்களுக்கு எதிராக வன்முறை நிகழ்த்தும் குடும்பத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தேவைப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் சட்டத்தின் கீழே இதுவொரு குற்றச் செயலாகக் கருதப்படுவதில்லை.

இலங்கை அரசாங்கம் பல பொலிஸ் நிலையங்களில் பெண்களுக்கான கருமபீடங்களை அமைத்துள்ள அதேவேளை அதிகமான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கான கருமபீடங்களில் பெண் உத்தியோகத்தர்கள் இருப்பதுமில்லை மற்றும் இவர்கள் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களாகவும் இல்லை. புத்தளம் மாவட்டத்திலே நான்கு பொலிஸ் நிலையங்களில் பெண்களுக்கான கருமபீடங்கள் காணப்படுகின்றன. இருந்த போதிலும் ஒரு கருமபீடத்திலாவது தமிழ் பேசும் பொலிசார் கடமையில் இல்லை. புத்தளம் மாவட்டமானது பெரும்பான்மையாகத் தமிழ்பேசும் மக்களைக் கொண்ட மாவட்டமாகும். திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் பெண்களுக்கான கருமபீடத்தில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதில்லை. பொலிசாரினால் தாம் துன்புறுத்தலுக்கு உள்ளாவதாகப் பல பெண்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.[5]

## கோரிக்கைகள்

ஆயுதப்படையினராலும், பொலிசாரினாலும், ஆயுதக் குழுக்களினாலும் தனிப்பட்ட நபர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு உட்பட்ட அனைத்து வன்முறைச் செயற்பாடுகளையும் உரிய முறையில் விசாரித்து சட்ட நடவடிக்கை எடுத்துத் தண்டிக்குமாறு இலங்கைக்கான CEDAW குழுவின் அவதானிப்புகளின் முடிவுகள் இலங்கை அரசாங்கத்தினைக் கோருகின்றது[6]. அத்துடன் பாலியல் வன்முறை தொடர்பாக மன அதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆற்றுப்படுத்தல் மையங்களை நிறுவுமாறும் அது அரசாங்கத்தினைக் கோரியுள்ளது. இராணுவப் பணியாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் வன்முறையினை சகல நாடுகளும் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் மோதலின்போது இவர்களால் நிகழ்த்தப்பட்ட குற்றச்செயல்களுக்கு இவர்கள் வகைப் பொறுப்புக் கூற வைக்கப்படல் வேண்டுமெனவும் பரிந்துரை 19 உம் விசேட தீர்மானங்களும் இந்த நாடுகளைத் தேவைப்படுத்துகின்றன.

பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இராணுவ ஆளணியினருக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் கோரிக்கை

விடுக்கின்றோம். இதனால் பாலியல் வல்லுறவுக்குட்பட்ட பெண்கள் நீதியினைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருப்பதுடன் அவர்கள் முன்வருவதற்கும் தைரியம் பெறுவர்.

இலங்கைச் சட்டத்தின் கீழ் பாலியல் வல்லுறவானது அரசுக்கு எதிரான ஒரு குற்றமாக கருதப்படுகின்ற அதேவேளை பாதிக்கப்பட்டவர் எந்தவித பரிகாரத்தினையும் பெறுவதில்லை. எனவே இராணுவம் மற்றும் பொலிசாரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களுக்கு இலங்கை அரசாங்கம் நட்டஈடு வழங்க வேண்டுமென நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து நிற்கும் வடக்கு கிழக்கு மக்களுக்கு உளசமூக சேவைகளை வழங்குவதற்கு NGOக்களுக்கும் சிவில் சமூகங்களுக்கும் அரசு அனுமதி வழங்க வேண்டும் எனவும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம். தற்பொழுது வன்னியிலே மீளக்குடியேறுகின்ற ஒவ்வொரு குடும்பமும் குறைந்தது ஒருவரையாவது யுத்தத்தில் இழந்திருக்கின்றது. தற்பொழுது உளசமூக இடையீடுகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு நிறுவனத்திற்குமோ அல்லது சிவில் சமூக நிறுவனத்திற்குமோ அனுமதி வழங்கப்படுவதில்லை. தீவிரமான மன அதிர்ச்சி வடுவிற்கு உள்ளாகி யுத்தத்தினால் பாரிய வன்முறைகளுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு இந்த அடிப்படைச் சுகாதாரப் பராமரிப்புச் சேவையினை வழங்க மறுப்பதானது அநீதியான ஒரு செயலாகும். அரசாங்கமானது அரசாங்க வைத்தியசாலைகளில் மனநல சிகிச்சைப் பிரிவுகளை அமைத்திருக்கின்றது. எவ்வாறாயினும், யுத்தத்தின்போது பெண்கள் முகங்கொடுத்த வன்முறை, பாலியல் வல்லுறவு, தடுத்து வைப்பு, அவர்களின் அன்புக்குரியவர்கள் காணாமல் போனமை பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்குப் பால்நிலைக் கூருணர்வு மிகு தளங்களோ அல்லது போதிய பணியாளர்களோ இந்தப் பிரிவினில் இல்லை. இச்சமுதாயத்தின் அவசரத் தேவையாக இருப்பது வடுக்களை ஆற்றுவதும் நடைபெற்ற சம்பவங்களுக்குத் தம்மை ஈடுகொடுக்கக் கூடியவர்களாக மாற்றுவதுமாகும். இதனால் அவர்களுடைய வாழ்வினையும் அவர்களுடைய சமுதாயத்தினையும் மீளக்கட்டியெழுப்பக்கூடிய ஒரு நிலை உருவாகும்.

நாட்டிலும் குறிப்பாக வன்னியிலும் இராணுவக் கட்டமைப்புகளை அகற்றி அங்கே ஆளுகைக் கட்டமைப்புகளைப் பதிலீடு செய்யுமாறும் சட்டத்தினையும் ஒழுங்கினையும் பேணுகின்ற பணியினை பொலிசாருக்கு வழங்குமாறும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம். இவ்வாறான பொலிஸ் நிலையங்கள் தமிழ் பேசுகின்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை பெண்களுக்கான கருமபீடங்களில் கொண்டிருக்க வேண்டும். வன்னியிலே இருக்கின்ற ஒவ்வொரு வைத்தியசாலையும் ஒரு GBV கருமபீடத்தினைக் கொண்டிருக்க வேண்டும். இந்த கருமபீடமானது இதன் மூலமாக பொலிசாருடனும் சட்ட முறைமையுடனும் இணைந்து செயற்படக்கூடியதாக இருக்கும்.

யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவில் வடக்கினைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரிடமும் பெண்களையும் சிறுமிகளையும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் இருந்தும் குறிப்பாக பாலியல் வல்லுறவு மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் நிகழும் ஏனைய அனைத்து வடிவிலுமான வன்முறைகளில் இருந்தும் பாதுகாப்பதற்கு விசேட நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் உறுப்புரை SCR 1325இனை வலியுறுத்துவதன் மூலம் கோருகின்றோம். குற்றத்தை நிகழ்த்தி விட்டுச் சட்டத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு முற்றுப் புள்ளியிடுவதனையும், இனப்படுகொலை, மானுடத்திற்கு எதிரான குற்றச் செயல்கள், யுத்தக் குற்றங்கள், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் மற்றும் ஏனைய வடிவிலான வன்முறை ஆகியவற்றினை நிகழ்த்துவோர் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டிய அரசின் பொறுப்பினையும் உறுப்புரை 11 வலியுறுத்துகின்றது. பாலியல் வல்லுறவு, பாலியல் அடிமைத்தனம், வலிந்து மேற்கொள்ளப்படும் பாலியல் தொழில், வலிந்து மேற்கொள்ளப்படும் கர்ப்பம், வலிந்து மேற்கொள்ளப்படும் கர்ப்பத்தடை அல்லது ஏனைய வடிவிலான பாலியல் வன்முறை ஆகியவை மானுடத்திற்கு எதிரான குற்றச்செயல்களுடன் ஒப்பிடப்படக்கூடிய தீவிரத் தன்மையினைக் கொண்டுள்ளதாக வரையறுக்கின்ற ரோம நியதிச்சட்டத்தின் உறுப்புரை 7G இனையும் நாம் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

***பெண்கள் வலையமைப்பு***

# ஜனநாயக ஆட்சியில் குடிமக்களின் பொறுப்புக்கள்




http://progreso-weekly.com/ - Wednesday, 08 July 2009

மனித உரிமைகள் சமவாயத்தின் பிரகடனம் 29 (1) வது பிரிவின் படி ''தனியான சுதந்திர மற்றும் முழுமையான அபிவிருத்தியானது இயலுமானவரையில் ஒவ்வொருவரினதும் சமூக பாங்கான கடமைகளில் ஒன்றாகும்'' இக்கருத்தானது அனைவருக்கும் பொருந்தும். அத்துடன் தனிமனிதனுக்கு என்று சில கடமைகள் அல்லது பொறுப்புகள் இருக்கின்றன. இந்தத் தனிப்பட்ட கடமையானது சட்ட கடப்பாடுகள் அல்லது மத நடவடிக்கைகள் சமூக சம்பிரதாய விழுமியங்கள் அல்லது தனியான இனத்துவ நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். பிரஜைகள் எனும் ரீதியில் நமக்கு கடமைகளும் பொறுப்புகளும் உள்ளன. இது தீர்மானம் எடுத்தலில் மக்களின் பங்கு மற்றும் எல்லா மட்டங்களிலும் தீர்மானம் எடுப்பவர்களை, கேள்விக்குட்படுத்துபவர்கள் போன்ற அனைவரும் பங்குதாரர்களாக மக்களுக்கு வகை கூற வேண்டியவர்களாகும். மக்களின் பங்களிப்பு என்பதன் கருத்தானது தனி மற்றும் சமூக அதிகாரம் தற்போதைய நிலையில் யுத்தத்திற்கு பின்னரான இலங்கையை கட்டியெழுப்புவதில் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

ஜனநாயகம் மக்களின் கடமையெனினும் தற்போது அரச இயந்திரமானது மிகவும் விவேகமான வகையில் இந்த சிவில் உரிமைகளை பாவிப்பதில் அலட்சியமாக இணங்காதுள்ளது. நாங்கள் இழந்து விட்ட சில நிச்சயமானவைகளுள் சட்ட அழுத்தப் பொறிமுறையானது அவற்றை மூடி மறைத்துக் கொள்கின்றது அல்லது உடனடியாக நம்மை

**அரசின் கொள்கைகளுக்குச் சவால் விடுக்கத் தொடங்கிச் சிதைந்து போயுள்ள நிறுவனங்களைத் திருத்த ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்பது யதார்த்த பூர்வமானதல்ல. ஆனால் அதனை ஏற்றுக் கொண்டு, ஒவ்வொருவரும் தமது சமூகத்திற்கும் தமது சக பிரஜைகளுக்கும் என்ன நடக்கின்றது என்பதைத் தாம் சிறந்த முறையில் அறிந்து கொண்டு, குறிப்பாக, நாட்டின் ஏனைய பிராந்தியங்களிலும், ஏனைய வகுப்புகளிலும், இனக் குழுமங்களிலும், சமுதாயங்களிலும் உள்ளவர்களுக்கு இதனைக் கூறுவதன் மூலம் இப்பணியினை நிறைவேற்ற முடியும்.**

குற்றவாளியாகத் திசை திருப்பி அதனை கட்சியின் பொறுப்பு எனக் கருதி அரச செயற்பாட்டில் விவேகமான துஷ்பிரயோகம் இடம்பெறுகிறது. இவ் இடைவெளியினுள் நல்லாட்சிக்கான கோரிக்கையினை முன்வைப்பது இலகுவானதாக இருக்க முடியாததுடன், சமய மற்றும் இன ரீதியான விடயங்கள் மற்றும் சமூக பால்நிலை சமத்துவம் என்பவற்றில் சமமாக மதிக்கப்படுவதுடன் அவர்களின் விருப்புகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

துடிப்பான ஜனநாயகத்தில் புதைந்துள்ள அடிப்படையானது அரச மற்றும் அதன் சகல நிறுவனங்களும் எமக்காக சமமாக தொழிற்பட வேண்டும். எங்களது கடமையானது அரசை காப்பாற்றுவதோ அல்லது ஒரு சமூகத்திற்கு விசுவாசமாக இருப்பதோ அல்லாமல் அரசானது இயலுமானவகையில் நியாயமான பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கியதாக இருத்தலாகும். இவை இறுதியில் எங்களது கடமைகளைத் தூண்டுவதுடன் கேள்விகள் கேட்பதற்கும் ஏனையோரோடு இணங்கி செயலாற்றுவதற்கும் ஒருங்கமைப்பதற்கும் தவறான கொள்கைகளுக்கு சவால் விடுவதற்கும் ஏதுவாக அமையும்.

## மக்களின் அடிப்படைப் பொறுப்புகளாவன:

1. உள்ளூர் மற்றும் தேசிய அளவில் என்ன நடைபெறுகிறது என்பது மக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். குறிப்பாக எமது நாட்டிற்கு மற்றும் பிரஜைகளுக்கு என்ன நடைபெறுகிறது என்பதும் தெரிய வேண்டும்.

இந்த அடிப்படையான கேள்வியை நாம் ஒவ்வொருவரும் நமக்குள் வினவுவதோடு இதனை நமக்கு உணர்த்துவதற்கு கடினமாக உழைக்க வேண்டும். இதன் கருத்தானது எங்களது சக பிரஜைகளுடன்அவர்களது வாழ்க்கை மற்றும் அனுபவங்களைப் பற்றி மனிதாபிமானத்துடன் வினவுதல் ஆகும். ஏனையோருடன் கதைத்தல் என்பது வித்தியாசமான சமூகத்தினரிடம் அல்லது வித்தியாசமான வகுப்பினரிடம் அவர்களது அனுபவங்கள், அவர்களது வாழ்வியல் சந்தரப்பங்கள், தேவைகள் மற்றும் கவனிப்புகள் என்பவை ஏனையோரிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை கேட்டறிதலாகும். இது இயலுமான வகையில் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு (உல்லாசத்திற்காகவன்றி நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காக) விசேடமாக வடக்கு கிழக்கு பகுதிகளுக்குப் பிரயாணம் செய்வதன் மூலமும் இரு தரப்பு அதிகாரிகளிடம் அவர்கள் என்ன செய்கிறார்கள் அல்லது நினைக்கிறார்கள் என வினவுவது மூலமும் அல்லது அவர்கள் யாதாயினும் பிரச்சினையான விடயத்தை கையாளும் போது ஏற்படும் சவால்கள் மூலமும் யாதாயினும் சில விடயங்கள் சமத்துவம் பேணப்படாது இடம்பெறும் போதும் இடம்பெறுவதைக் குறிக்கும்.

2. ஜனநாயக பிரஜைகள் என்ற வகையில் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் தொடர்பில் அக்கறையுடன் தொழிற்படுவதென்பது நாம் தகவல்களை முறையான வகையில் தெரிந்து கொள்வதை உறுதி செய்வதாகும். அரசானது தமது கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் மக்களுக்கு தெரிவிக்க வேண்டியதுடன் சமூகத்தின் பெரிய நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மத அமைப்புகள் தங்களது நடவடிக்கைகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையாக இருப்பதுடன் ஊடகங்களின் பங்கானது சுதந்திரமாக இயங்கித் தகவல்களை முழுமையாக பரந்த அளவில் பரவச் செய்து, சகல பிரஜைகளும் சமூகத்தில் என்ன இடம்பெறுகிறது என்பதை அறிவதற்கு வழிகோலுவதுடன் சக பிரஜைகளின் கருத்துகளை விருப்புகளை கேட்டறிவதுமாகும்.

3. அடுத்த படியாக ஜனநாயக பிரஜை என்ற வகையில் அரசின் கொள்கைகள் சகல பிரஜைகளுக்கும் நியாயமாகவும் சமத்துவமாகவும் கிடைப்பதற்கு வழிவகுப்பதாகும். இதனை செயற்படுத்தும் போது சில மக்கள் குழுக்கள் அல்லது சமூகமானது சமமாகக் கவனிக்கப்படுவதில்லை எனவும் பொதுச் சேவையில் அவர்களுக்குரிய பங்கு முறையாக பகிரப்படுவதில்லை எனவும் அவர்கள் சொந்த மொழியை சமயத்தை பாவிக்க அனுமதிக்கப்படுவதில்லை எனவும் அவர்களது காணிகள் சுவீகரிக்கப்படும் போது அதற்குரிய நட்டஈடு வழங்கப்படுவதில்லை எனவும் பாலியல் வன்முறைகளில் இருந்து பாதுகாக்கப்படுவதில்லை எனவும் அவர்கள் தடுப்பு காவலில் வைக்கப்படும் போது அவர்கள் சார்பில் சட்டத்தரணி ஒருவரை அனுமதிக்க அனுமதி மறுக்கப்படுவது தொடர்பில் ஏனைய தரப்பினரால் பேசப்பட வேண்டும். சமூகத்தினருக்கு இதனை அறிவிப்பதோடு பத்திரிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்வதும் அதற்கு பொறுப்பான அரச அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதும் முக்கியமாகும்.

(இது கடினமானதாக இருப்பினும் கிளிநொச்சித் தாய்மார் தங்களின் காணாமல் போன பிள்ளைகள் தொடர்பில் எதுவித பாதுகாப்பும் இன்றி LLRC யிடம் வினவியது

குறிப்பிடத்தக்கதாகும். நாங்கள் அவர்களது முயற்சியை முன்னுதாரணமாக கொள்ள வேண்டியிருப்பதுடன் அதனைப் பின்பற்றவும் வேண்டும்)

04. இறுதியாக ஜனநாயக பிரஜை என்பதன் மூலம் குறிக்கப்படுவதாவது மக்கள் தமது உரிமைகள் சவால்கள் மற்றும் அரசின் கொள்கை மாற்றங்களை செயற்படுத்தும் நிறுவனங்கள் தொழிற்படும் வகையில் இருப்பதை உறுதி செய்து கொள்வதாகும். அவைகள் அவ்வழியில் தொழிற்படாத போது அதனை செயற்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும். இதன் மூலம் குறிப்பிடுவதானது நிறைவேற்று அதிகாரம் அரசியல்வாதிகள் அரச அதிகாரிகள் மற்றும் கூட்டுத்தாபன பிரிவினரிடம் கதைப்பது மற்றும் அதனை செயற்படுத்தும் அழுத்தங்களின் செல்வாக்கினை பயன்படுத்துதல் ஆகும். அதன் மூலம் மேலும் கருதப்படுவதானது அரசியல் கட்சிகள் அரசசாரா நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தங்களது சொந்த நடவடிக்கையாகக் கருதி அரசிடம் கேள்வி கேட்கும் அல்லது அரசுக்கு சவால் விடும் வகையில் தொழிற்படும் மக்களை ஒழுங்கமைத்து அனைத்து மக்களையும் அவர்களது உரிமைகளை சமமான வகையில் வெளிப்படுத்தச் செய்வதாகும்.

இலங்கையிலே தற்போது நிறைவேண்டியதான குறிப்பாகக் கடினமான இரண்டு மிகவும் இன்றியமையாத பொறுப்புகள் உள்ளன. அரசின் கொள்கைகளுக்குச் சவால் விடுக்கத் தொடங்கிச் சிதைந்து போயுள்ள நிறுவனங்களைத் திருத்த ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்பது யதார்த்த பூர்வமானதல்ல. ஆனால் அதனை ஏற்றுக் கொண்டு, ஒவ்வொருவரும் தமது சமூகத்திற்கும் தமது சக பிரஜைகளுக்கும் என்ன நடக்கின்றது என்பதைத் தாம் சிறந்த முறையில் அறிந்துகொண்டு, குறிப்பாக, நாட்டின் ஏனைய பிராந்தியங்களிலும், ஏனைய வகுப்புகளிலும், இனக் குழுமங்களிலும், சமுதாயங்களிலும் உள்ளவர்களுக்கு இதனைக் கூறுவதன் மூலம் இப்பணியினை நிறைவேற்ற முடியும். இந்த நாட்டின் சகல பிரஜைகளிற்கும், அவர்கள் பேசுகின்ற மொழிக்கும் அவர்களுக்குக் கிடைக்கின்ற கலாசார வாய்ப்புகளுக்கும் தமது சொந்த விடயங்களைப் பெருமளவிற்கு அவர்களே தீர்மானித்துக் கொள்வதற்கும் அவர்கள் அரசினால் சமமாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவர்களின் உரிமைகளை எவ்வாறு மதிக்க வேண்டும் என நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இவைதான் மிகவும் அடிப்படையான பொறுப்புகளாகும். இவையின்றி, எத்தனை தேர்தல்கள் நடத்தப்பட்டாலும் ஒரு சமூகத்தினால் ஜனநாயக சமூகமாகப் பரிணமிக்க முடியாது.

***ஷிரீன் ஷறூர்***






# இலங்கை இராணுவத்திற்கு மன்னார் தரவன்கோட்டை வீதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காணி தொடர்பாக அப்பகுதி மக்கள் அடைந்துள்ள அச்சம்

மன்னார் எழுத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள தரவன் கோட்டைப் பகுதியில் UNDP நிறுவனத்தினால் அப்பகுதியில் வசிக்கின்ற மக்களது தேவை கருதி அதாவது அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான நீர் வசதியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக அமைத்துக் கொடுக்கப்பட்ட குளத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள காணியை அரசாங்கம் படையினருக்காக ஒதுக்கீடு செய்வதை அறிந்து அப்பகுதி மக்கள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளார்கள். ஏனெனில் இப்பகுதி மக்கள் பெரும்பாலும் ஏற்கனவே இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டதோடு இதுவரை காலமும் இடம்பெயர்ந்து கிளிநொச்சி, அடம்பன், இந்தியா எனப் பல இடங்களில் வாழ்ந்ததோடு யுத்தத்தின் பின்னர் மீண்டும் இவ்விடத்தில் வாழ முற்பட்டுள்ளனர். குறிப்பிட்ட இப்பகுதியை சுற்றியுள்ள 09 கிராமங்களில் அதாவது தரவன்கோட்டை, தோட்டக்காடு, எழுத்தூர், கீரி, செல்வநகர், தாழ்வுபாடு, ஜிம்றோன்நகர், ஜீவபுரம், பட்டிதோட்டம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களில் பெரும்பான்மையான மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களாகவும், யுத்தத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்ட மக்களாகவும் இருப்பதுடன், பெரும்பான்மையான குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களாகவும் இருக்கின்றன. ஏற்கனவே இந்தக் கிராமத்தில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் தொடர்பான பிரச்சினைகளும், காணி, குடிமனை தொடர்பான பிரச்சினைகளும் மேலோங்கிக் காணப்படுகின்றன.

இதனைவிட மாரி காலங்களில் இந்தக் கிராமங்கள் வெள்ளத்தினால் தொடர்ச்சியாக பாதிப்படைகின்ற நிலையில் உள்ளன. ஜீவபுரம், ஜிம்றோன்நகர், தரவன்கோட்டை ஆகிய கிராமங்களில் மழை காலங்களில் தேங்கி நிற்கின்ற நீர் இராணுவத்திற்கு வழங்கப்பட்ட காணியினூடாகவே குளத்தினை அடைகின்றது. இந்நிலையில் படையினருக்கு ஒதுக்கப்பட்ட காணியில் முகாம் அமைக்கப்படுமானால் அக்குளத்தைப் பாவிக்கும் பெண்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்

அதாவது அப்பகுதியில் வாழும் பெண்களது பாதுகாப்பு, மற்றும் நடமாடும் சுதந்திரம் பறிக்கப்படும் வாய்ப்புண்டு. பெண்பிள்ளைகளை தனியாக பாடசாலைக்கு அனுப்புவது தொடர்பாக பெற்றோர்கள் மீள்சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட கொண்ட குடும்பங்களும், இளம்வயதுப் பெண்களை அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பங்களும் தங்களுடைய பாதுகாப்பு தொடர்பாக அச்சமடையும் தன்மை காணப்படுகின்றது. ஏற்கனவே யுத்தத்தால் உயிரழிவுகளைச் சந்தித்த பெண்கள் குடும்பங்கள் மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டை எதிர்நோக்குவது வேதனைக்குரிய விடயமாகும். மக்களது பாவனைக்காக அமைக்கப்பட்டுள்ள தரவன்கோட்டை வீதியில் அமைந்துள்ள இக்குளத்தினை தொடர்ந்தும் பாவனைக்கு (பெண்கள் குளிப்பதற்கு பயன்படுத்துதல்) உட்படுத்த முடியாத நிலை ஏற்பட அதிக வாய்ப்பு



**இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தாழ்வு நிலம் உயர்த்தப்படும் போது மழை காலங்களில் ஏற்கனவே வெள்ளத்தினால் பாதிக்கப்படும் இப்பகுதியில் உள்ள கிராமங்கள் அதிக வெள்ளத்தினால் மேலும் பாதிப்படையும். அத்தோடு இப்பகுதியினை சூழவுள்ள கிராமங்களில் ஏற்கனவே காணியற்ற குடும்பங்கள் அதிகமாக உள்ளார்கள். அவ்வாறிருக்கையில் இக்காணியினை படையினருக்கு வழங்கியுள்ளமையானது பொறுப்பான எவருமே வறுமைப்பட்ட மக்களது வாழ்வாதாரம் மற்றும் இருப்பிடம் பற்றிச் சிந்திக்காத மற்றும் கவனத்தில் எடுக்காத தன்மையுடன் செயற்படுகின்றமையை வெளிப்படுத்துகின்றது.**

உண்டு. அத்தோடு இந்தப் பகுதியில் வாழ்கின்ற குறிப்பிட்ட தொகையான குடும்பங்கள் மலசலகூட வசதியின்றி அருகில் இருக்கும் காட்டுப் பகுதியினை பயன்படுத்துகின்றார்கள். இந்நிலையில் படையினர் முகாம் அமைப்பதால் இவர்களுக்குத் தங்களது நாளாந்தக் கடமைகளைப் பாதுகாப்புக் கருதி நிறைவேற்ற முடியாமல் இருக்கும்.குறிப்பாகப் பெண்களுக்கு நாளாந்தக் கடமைகளை நிறைவேற்ற முடியாது போய்விடும்.

உயர்தரம் கற்கும் மாணவிகள் அதிகாலையில் பிரத்தியேக வகுப்பிற்கு தனியாக செல்வர். ஆகவே பெண்பிள்ளைகள் இனிவரும் காலத்தில் அவ்வாறு செல்லமுடியாத நிலை உருவாகும். அயலில் உள்ள கிராமச் சிறுவர்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும். இராணுவ முகாம் இதில் அமைக்கப்பட்டால் இவ்வீதி கனரக வாகனங்களின் பாவனைக்குட்படுத்தப்படும் இதன் காரணமாக சிறுபிள்ளைகள் விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்படும்.

மன்னார் தரவன் கோட்டைப்பகுதியில் அமைக்கப்படவுள்ள இராணுவ முகாம் தொடர்பாக அப்பகுதியில் வசிக்கும் சில பெண்களுடன் உரையாடிய போது அவர்கள் பெரும்பாலும் தமது அச்சத்தையே வெளிப்படுத்தினர். பாதுகாப்புத் தொடர்பாகவும், தமது இயல்பு வாழ்க்கை தொடர்பாகவும் கேள்வி எழுப்பினர்.

“ஏற்கனவே யுத்த சூழலில் வளர்ந்த நாங்கள் திரும்பவும் இராணுவச் சூழலில் தள்ளப்படுகிறோம். அண்மையில் இடம்பெற்ற கிறிஸ் பூதத்தின்ர கதையால நாங்கள் பக்கத்து வீடுகளோடை இரவில் சேர்ந்து தங்கினம். இது இனிக் காலம் முழுவதும் தொடருமெண்டால் எப்படி நிம்மதியாக வாழுறது? எந்த நாளும் பக்கத்து வீடுகளிலை போய்த் தங்கிறதால பிரச்சினைகள் தான் கூடும். இராணுவ முகாம் வந்தால் எமது அந்தரங்க வேலைகளைப் பயத்துடன் தான் செய்ய வேணும். இங்கு வாழுற மக்கள் நாங்கள் பலர் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கிறம். நீர், மலசல கூட வசதிப் பற்றாக்குறை உண்டு. அதனாலே தண்ணீர் வசதிக்காக யூ.என்.டி.பீ நிறுவனம் தரவன் கோட்டைப்பகுதியில் குளமொன்றை அமைத்துத் தந்தார்கள். அதனருகே இப்போது இராணுவ முகாம் வர இருக்கிறது. குடிமனைக்குள் இராணுவம் வருவதால எங்கட இயல்பு நிலை பாதிக்கும். குளிக்கப் போக ஏலாது. மலசல கூடம் இல்லாதவங்கள் பக்கத்துக் காட்டுக்குப் போவினம். இனி விடிகாலை எழும்பி காலைக் கடனுக்கும் போக முடியாது. எமது பகுதியில் வீதி புனரமைப்புக் குறைவு. இதால மழை காலத்தில பவுசர் வராது போய்விடும். பைப் லைன் வசதி இல்லை. ஆகவே எமக்கு இருந்த ஒரே நீர் பெறுகிற இடம் தரவன் கோட்டைக் குளம் மட்டுமே. அதுவும் இனி எமக்கு இல்லாது போனால் என்ன செய்யப் போகிறோமோ தெரியாது”.

“பெண்கள் சிலர் நாமே எமது குடும்பத்தைப் பராமரிக்கிறம். சவுத்பார் போய் மீன் வெட்டிக் கொடுத்து விட்டு வருவம். இரவு 8, 9 மணி போலவே போய்க்



தரவன் கோட்டை மக்கள் குளிப்பதற்குப் பயன்படுத்தும் குளத்தின் ஒரு பகுதி



தரவன் கோட்டை மக்கள் குளிப்பதற்குப் பயன்படுத்தும் குளத்தின் ஒரு பகுதி

குளத்தில குளிப்பம். உப்பளம் போறம். எல்லாரும் இருட்டிய பிறகே திரும்பி வந்து குளிப்பம். இனி அதுவும் முடியாது. நாங்கள் எல்லாரும் சமுர்த்தி முத்திரை பெறுகின்ற வறுமைப்பட்டோர்கள். வன்முறையால பாதிக்கப்பட்டு எஞ்சியுள்ளோம். ஆனால் யுத்தம் முடிஞ்ச பின்னும் இராணுவப் பயம் போகவில்லை"...

இப்பகுதியில் காணப்படும் அதிகமான வீடுகள் பாதுகாப்பற்ற வீடுகளாகவே காணப்படுகின்றன. நிறுவனங்களால் சிலருக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளைத் தவிர ஏனையோர் தற்காலிக வீடுகளையே அமைத்துள்ளனர். தற்போது படையினரின் (ஆண்களின்) நடமாட்டம் அதிகரிப்பதால் பெண்கள் தங்களது அந்தரங்கமான விடயங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தாழ்வு நிலம் உயர்த்தப்படும் போது மழை காலங்களில் ஏற்கனவே வெள்ளத்தினால் பாதிக்கப்படும் இப்பகுதியில் உள்ள கிராமங்கள் அதிக வெள்ளத்தினால் மேலும் பாதிப்படையும். அத்தோடு இப்பகுதியினை சூழவுள்ள கிராமங்களில் ஏற்கனவே காணியற்ற குடும்பங்கள் அதிகமாக உள்ளன. அவ்வாறிருக்கையில் இக்காணியினை படையினருக்கு வழங்கியுள்ளமையானது பொறுப்பான எவருமே வறுமைப்பட்ட மக்களது வாழ்வாதாரம் மற்றும் இருப்பிடம் பற்றிச் சிந்திக்காத மற்றும் கவனத்தில் எடுக்காத தன்மையுடன் செயற்படுகின்றமையை வெளிப்படுத்துகின்றது.

தொகுப்பு – **குகநிதி குகநேசன்**

# சர்வதேச தாய் மொழித்தினம் 2012



மாசி 21 - சர்வதேச தாய் மொழித்தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. வங்காள மொழியை அரசகரும மொழியாக ஆக்கக் கோரிய போராட்டத்தின் போது உயிர் நீத்த நான்கு மாணவர்களின் நினைவாக மாசி 21 சர்வதேச அளவில் மொழி தொடர்பாக நினைவு கூரப்படும் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. வங்காளதேச அரசாங்கத்தின் முயற்சிகள், சர்வதேச அமைப்புகளது ஆதரவுகள் காரணமாக ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ அமைப்பு மாசி 21ஐ 1999ஆம் ஆண்டு சர்வதேச தாய்மொழித் தினமாகப் பிரகடனப்படுத்தியது. 2000ஆம் ஆண்டு முதல் மாசி 21 ஐ உலகம் முழுவதும் சர்வதேச தாய் மொழித்தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்தத் தினத்தில், உலகில் உள்ள 6000-7000 வரையான மொழிகளுள் ஒன்றாகவுள்ள தமிழ் மொழியினைப் பேசிவரும் நாம், தமிழ் மொழியை இன்றைய சர்வதேச ரீதியான சவால்களுக்கு மத்தியில் எத்தகைய நோக்கில் கொண்டு செல்லப் போகின்றோம் என்பது உரையாடலுக்குரிய விடயமாக அமைகின்றது.

கடந்த 8 வருடங்களாக சர்வதேச தாய்மொழித் தினத்தைக் கொண்டாடிவரும் **மூன்றாவதுகண் நன்பர்கள் குழுவினராகிய** நாம் இன்றைய சூழலில் தமிழ்மொழி பற்றிய எமது கருத்துகளை ஆக்க பூர்வமான உரையாடல்களுக்காகப் பகிர்ந்து கொள்ள முனைகின்றோம்.

### 21ஆம் நூற்றாண்டில் தமிழும் தமிழர்களும்

இன்று உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் தாம் வாழும் நாடுகளின் சுதேசமொழிகளில் தமது இரண்டாவது தலைமுறையினரைப் பரிச்சயப்படுத்தி வரும் நிலையில், இவ்விதம் வித்தியாசமான மொழிகளின் ஆளுமைகளுடன் வளரும் தலைமுறையினருக்கான தொடர்பு மொழியாகத் தமிழை உலகத் தமிழருக்கான இணைப்பு ஊடகமாக நாம் பயன்படுத்துவது ஆக்கபூர்வமான முன்னெடுப்பாக இருக்கும்.

இதனைச் சாத்தியமாக்குவதற்குரிய வகையிலேயே இன்றைய தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு “தமிழ் இணையம்” அமைந்துள்ளது. கணணித் தமிழுக்கூடாக உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்கள் தொடர்ந்தும் தமிழர்களாக வாழ்வதற்கான சாத்தியப்பாடுகளை உருவாக்கிட முடியும்.

இத்தகைய செயற்பாடுகள் மூலமாக இதுவரை ஆங்கிலம் ஊடாக மட்டும் ஒரு பரிமாணத்தில் தரிசித்து வந்த உலகப் பார்வையினை நாம் பலபரிமாணத்தில் தரிசித்திட முடியும். அதாவது நேரடியாக ஜேர்மன் மொழியிலிருந்தும், பிரான்சிய மொழியிலிருந்தும், டச்சு மொழியிலிருந்தும், நோர்வீஜிய மொழியிலிருந்தும், ஸ்பானிய மொழியிலிருந்தும், தமிழுக்கு மொழிபெயர்ப்புகள் வரும்போது உலகம் பற்றிய பல பரிமாணங்களையும் நாம் தரிசிக்க முடியும்.

இதேபோல் தமிழில் உள்ளதை உலகம் முழுவதும் பரவலாக்கவும் முடியும். இதனனூடாகப் பலபரிமாணங்களில் உலகப் பார்வையை வழங்கும்

மொழியாகவும், உலகம் முழுவதும் பரவலாகிய மொழியாகவும் தமிழ் செழுமை அடையும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இன்று சுதேசிய மொழிகள் அனைத்தும் தாய்மொழிகள் என்றே அழைக்கப்பட்டு வருகின்றன. உண்மையில் இந்த மொழிகள் அனைத்தும் ஆண்களின் மொழியாகவே அமைந்திருக்கின்றன. உதாரணத்திற்கு எமது தமிழ் மொழியினை எடுத்துக் கொண்டால் இம்மொழியில் கோபத்தினை, வெறுப்பினை வெளிக்காட்டுவதற்கான சொற்களாக பெண்களின் பாலுறுப்புகளோடு தொடர்புபட்ட சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். இத்துடன் சாதியடிப்படையில் ஒடுக்குமுறைகளுக்குள்ளாகும் சமூகங்களின் சாதிப் பெயர்களும் தமிழில் கோபம், வெறுப்புக்கான மொழிகளாக அமைந்திருக்கின்றன.

இதேபோல ஆணாதிக்க அதிகார ஒடுக்குமுறைச் சிந்தனைகளை மொழியூடாகக் கட்டமைத்துள்ள நிலையினைக் களைந்து, ஆணுக்கும் பெண்ணுக்கும் அனைத்து மனிதர்களுக்கும் உரிய சமத்துவத்தை வழங்கும் ஆக்கபூர்வமான மொழியாகத் தமிழை மீளமைத்துக் கொள்ளுதலே ஆக்கபூர்வமான தமிழ்மொழியின் நிலைப்பிற்குச் செய்யும் பணியாக அமையும்.

***மூன்றாவது கண் நண்பர்கள் குழு***

# போர் வன்முறை

இரத்த ஆறுகள் ஓடி ஓய்ந்து கிடக்கிறது வன்னி மண்ணில்
சுற்றுப்புறமே சுடுகாடாய் எரிந்து கொண்டிருந்த வேளையும்
செல்லடிகள் ஓயாமல் தொடர்ந்து கொண்டிருந்தன
பாடசாலை மாணவர்களைக் கூடப் பகிரங்கமாய் துரத்த தொடங்கியது
மாணவியாய் இருப்பதை விட மனைவியாய் இருப்பது மேல் என்று நினைத்த பெண்களும்
இளவயதிலே திருமணமும் இரு கையிலே குழந்தைகளும்
அதில் அகப்பட்டவரும் சிலருண்டு.

புத்தகச் சுமை தாங்க வேண்டியவர் மீது
குடும்பச் சுமை சுமத்தப்பட்டு விட்டது
உடைந்து போன வீடுகளும்,
சிதறிக் கிடக்கும் உடலுறுப்புகளும்
ஆங்காங்கே குத்தப் பட்டிருக்கும் செல் துண்டுகளும்
போர் வன்முறையைப் பெருமளவில் எடுத்துச் சொல்லும்

புத்தகப்பை சுமந்த அனைவர் கையிலும்
ஆயுதச் சுமையும், பயச் சுமையும்
முன்னேற முடியா விதவைக்கோலமும்
காணாமல் போன கணவனைத் தேடியுமே
பல பெண்களின் வாழ்வு முட்டுக் கட்டையாய்
முடங்கிக் கிடக்கின்றது



***வஷீமா வாஷீர்***



# "நாங்களும் பெண்கள் தான்"

இவ்வுலகில் மனிதன் தோன்றிய காலத்தில் குடும்பங்கள் இருக்கவில்லை என்பதை நாங்கள் யாவரும் அறிவோம். வேட்டையாடித் தமது உணவைத் தேடியவர்களாகவும் ஓர் முறையான வாழ்க்கை முறைமையோ, சாதி, இனம், சமயம் கிராமங்கள் என்றெல்லாம் அமைப்பு முறைமை இன்றியும் வாழ்ந்தார்கள்.காலம் செல்லச் செல்ல நாகரீகமும் வளர்ந்தது. பல்வேறு கண்டுபிடிப்புகளையும் கண்டு பிடித்தனர். ஆனால் பெண்கள் பலதுறைகளில் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நவீன காலத்தில் பெண்களை இழிவுபடுத்தும் சக்திகளும் எம்முன்னே இருக்கத்தான் செய்கிறது.

சிறுவயதில் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் குடும்ப வாழ்க்கைக்கு பக்குவப்படாத நிலையில், தங்களது குடும்ப வாழ்க்கையில் சில விட்டுக்கொடுப்புகள், புரிந்துணர்வின்மை காரணமாக பெண்கள் சமூகத்தில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். அதாவது குடும்பப்பிரிவு காரணமாக பிரிந்து சென்றாலோ அல்லது கணவன் இறந்து போனாலோ, காணாமல் போனாலோ, அவர்களின் பிள்ளைகளும் பெண்களுக்கே சுமையாக மாறுகின்றனர்.பெண்கள் பொருளாதார ரீதியில் ஆண்களில் தங்கி வாழ்வதே இந்த சுமைக்கு ஒரு காரணமாகவுள்ளது. இந்த நிலைக்குட்பட்ட பெண்கள் தங்களது பிள்ளைகளை வளர்ப்பதற்காக வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. வேலைக்குச் செல்லும்போது சில பெண்களுக்கு தங்களது பிள்ளைகளை பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்கு உதவியில்லாமலும், உதவியிருந்தும் அது கிடைக்காமலும் கஷ்டப்படுகின்றனர். இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி ஆசை வார்த்தைகளைக் கூறி, ஏமாற்றி தங்களது இச்சைகளைத் தீர்த்துக் கொள்ளும் இரக்கமற்ற சிலர் ஒருபக்கமும், அவளின் ஒவ்வொரு அசைவினையும் கண்காணித்துக் கொண்டிரும் சமூகத்தின் சில சக்திகள் மறுபக்கமும் உள்ளன. இந்த இக்கட்டான சூழ்நிலையில் தனது வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கும் பெண்களின் கதைகளோ ஏராளம்! ஏராளம்!


எவ்வளவு கௌரமாக வாழ்ந்தாலும் பெண்களுக்கு வறுமை தனிமை, இயலாமை என்று வந்து விட்டால் இந்த சமூகத்தில் வாழ்வதற்கு துணிவு மற்றும் தனக்கெதிராக பேசப்படும் வசைகளைக் காதில் போட்டுக் கொள்ளாது தமது வாழ்க்கையைக் கொண்டு போகும் பெண்கள் எத்தனை பேர் தான் உள்ளனர். வேலைக்குப்போகும் போது யாராவது ஒருஆணின் சைக்கிளில் போய்விட்டாலோ, வேலை முடிந்து தாமதமாக வந்தாலோ வீட்டிற்கு விருந்தினராக ஆண்கள் வந்தாலோ, அந்தப்பெண் ஒரு ஆணுடன் கதைத்தாலோ, தனித்து தனது வீட்டுத் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு வெளியில் சென்றாலோ அவளைத் தூற்றுவதற்கும், நடத்தை கெட்டவள் என்றும், தூய்மையற்றவள் என்றும் வாய் கூசாது பேசி அவளை மேலும் பிரச்சினைக்குட்படுத்தி உளரீதியில் பாதிக்க வைப்பவர்கள் தான் எத்தனை பேர் உள்ளனர். தூய்மையானவள் என்றால் என்ன? தூய்மைக்கு வரைவிலக்கணம் தான் என்ன? இந்த சமூகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பெண்ணும் அவளது பிள்ளைகளும் அன்று முழுவதும் சாப்பிடாமல் இருந்தாலோ, அல்லது அவளுக்குப் பொருளாதார ரீதியில் தேவையிருந்தாலோ எமது சமூகத்தில் எத்தனை பேர் பிரதிபலனின்றி உதவத் தயாராக உள்ளனர்? தனித்துப்போன பெண்ணுக்கு வாழ்க்கைத்

துணையாகக் கூடவர எவரும் முன்வருவது மிகமிகக் குறைவு. எமது சமூகத்தில் துணையையிழந்த பெண்களுக்கு பிரதிபலனின்றி உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் கொடுக்காத நல்ல உள்ளங்கள் இருந்தால் அவள் விபச்சாரி என்றும் நடத்தை கெட்டவள் என்றும், தூய்மை அற்றவள் என்றும் விமர்சிக்கப்பட வேண்டிய தேவையில்லை. பிள்ளை பாலுக்கு அழுகிறது என்று பால்மா கேட்டால், எனது இச்சைக்கு இணங்கினால் தருகிறேன் எனும் போது வேறு வழி தெரியாத ஒரு தாயானவள் பிள்ளையின் பசியைத் தீர்க்க எண்ணுவாளா? அல்லது தனக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தத்தைப் பற்றி எண்ணுவாளா?. இவ்வாறான பெண்கள் ஒரு முறை நிர்ப்பந்தத்திற்கு ஆளான பின் அதனை அடையாளம் கண்டு கொள்ளும் சிலர் அவளது வறுமையை பயன்படுத்துகின்றனர். இந்நிலைக்கு யார் காரணம்? இந்த சமூகம் பெண்பிள்ளைகளை பிள்ளை பெறுபவளாகவும், சமைப்பவளாகவும், இச்சையைத் தீர்ப்பவளாவும், சமூகத்தின் இரண்டாம் நிலைப்பிரஜையாகவும் தான் பார்க்கின்றது. பொருளாதார ரீதியில் ஆண்களில் தங்கிவாழும் பெண்களாக வளர்க்கப்படுவதும் இதற்கு காரணமாக அமைகிறது.

பாதிக்கப்பட்ட பெண்களுக்காக வேலை செய்கின்றோம், பெண்களுக்கு இருக்கும் பிரச்சினையை வெளியே கொண்டு வருகின்றோம் என்றெல்லாம் பிரச்சாரம் செய்யும் சிலர் பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களின் பெயர், இடம் வயது என முழுவிபரங்களை செய்தித் தாள்களிலும், சில சஞ்சிகைகளிலும் வெளியிடுகின்றனர். குறிப்பிட்ட பெண்ணிடம் தன் இச்சைகளையெல்லாம் தீர்த்துக்கொள்ளும் நபர்களின் பெயர், வயது இடம், பதவி, அவர்களுக்கு சமூகத்திலிருக்கும் அந்தஸ்து போன்ற வற்றை வெளியிடக்கூடாது? வறுமையிலுள்ள பெண்கள் ஒவ்வொருவரும் விரும்பியா தமது உடலையும் மனதையும் வருத்தித் தொழில் செய்கின்றனர்? அவர்களுக்குப் பின்னால் ஓர் நியாயம் இருக்கும், கதையிருக்கும் அதைக் கேளுங்கள் பின்னர் அவர்களுக்கு எவ்வாறு நாம் உதவலாமென ஒரு சமூக நோக்குடன் பாருங்கள்.

சமூகத்திலுள்ள சில சட்ட திட்டங்களை நாம் எல்லோரும் 100% செயற்படுத்துகின்றோமா? நாமும் பல சந்தர்ப்பங்களில் எமது தேவையின் நிமிர்த்தம் பொய் சொல்கிறோம் களவு செய்கிறோம் அல்லவா? ஏன் சட்ட விரோத செயல்களில் கூட ஈடுபடுவதில்லையா? எல்லோரும் தண்டனை அனுபவிக்கின்றோமா? மதுபோதைக்கு அடிமையாகிய ஓர் ஆணை ஒரே நாளில் குடியிலிருந்து விடுபடச் செய்ய முடியுமா? நீண்ட கால சிகிச்சையின் பின்னர் அவர் மீளவில்லையா? அவ்வாறுதான் இந்த சமூகத்தில் தவறுவிட்ட பெண்ணையோ, பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களையோ நடத்தை கெட்டவள் என்றும், தூய்மையற்றவள் என்றெல்லாம் தூற்றாமல், வஞ்சிக்காது, அவளையும் எமது சமூகத்தில் ஒருவராக இணைத்துக் கொள்ள வேண்டும். என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.அவளுக்கும் எதிர்காலம் உண்டு, கனவுகள் உண்டு, ஆசாபாசங்கள் உண்டு இலட்சியங்கள் உண்டு. எனவே அவர்களுக்கு இருக்கும் அடிப்படைப் பிரச்சினையினை அடையாளம் கண்டு சமூகம் உதவ வேண்டும், ஆதரவு வழங்க வேண்டும். இது எமது சமூகத்தின் கடமையாகும்.

**கு. மகாலட்சுமி**



# விலக்கப்படாத விலங்காக...

எம்மைப் பற்றிய
இருப்புகளும்
அடையாளங்களும்
வெளிப்படுத்தல்களும்
விவஸ்தையற்ற விவரணங்களாகத்
தோன்றுகின்றன போலும்?
விருப்பின் பேரில் மட்டுமே
நாம்
அவசியமாகின்றோம்.
தலை சாய்க்கவும்
தாகம் தீர்க்கவும் மட்டுமே
நாமும்
எமது உடலும்
இருக்க வேண்டுமென
கோடிட்டுக் காட்டுகிறீர்கள்

உங்கள்
விருப்பங்களே எங்கள்
விருப்பங்களாகவும்,
எங்கள் விருப்பங்கள்
உங்களுக்கு வெறுப்புகளாகவும்
நாளுக்கு நாள்
மாற்றமடைகின்றன.

வகுக்கப்படாத சட்டங்களும்
மிகைப்படுத்தப்பட்ட
ஐதீகங்களும்
எம் மீது சுமத்தப்படுகின்றபோது
எங்களுக்கான
சுயம்
வலுவிழந்து போகிறது.

போலி முகாரியை
முகத்தில் பூசிக் கொண்டு
எம் முதுகின் மீதான
உங்களின் மூர்க்கத்தின்
கனம்
முத்திரை பதிக்கின்றது.
ஒவ்வொரு இரவும்
சத்தமின்றி
செத்துக் கொண்டிருப்பதும்,
எமது உடலை உருக்கி
நீங்கள்
இன்பம் காணுவதும்
இன்னொரு புறம்...

பொய்யாகிப் போன
வாழ்க்கை வட்டத்திலே
பொசுங்கியவர்களாக
நாங்களும்
பொசுங்கிப் போன வாழ்க்கையிலிருந்து
குளிர் காய்பவர்களாக
நீங்களும்

சாந்தினி




# வடக்கு – கிழக்கைச் சேர்ந்த பெண்கள் உண்மையான சமாதானத்திற்கும் நீதிக்கும் வகைப்பொறுப்பிற்கும் அழைப்பு விடுக்கின்றனர்

முடிவுக்கு வந்த முப்பது வருட கோர யுத்தம் அதனுடன் சேர்த்து சமாதானம், மீளிணக்கம், அபிவிருத்தி மற்றும் சகலருக்கும் சமத்துவம் ஆகியவற்றிற்கான எதிர்பார்ப்புகளையும் கூடவே தந்து விட்டே சென்றிருக்கின்றது. எவ்வாறாயினும் கடந்த மூன்று வருடங்களாக அரசாங்கம் இந்த அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எவ்வித கடப்பாடுகளையும் காட்டாமையானது வடக்கு கிழக்கிலுள்ள பெண்களை ஒரு பாதிப்புறு நிலையில் தள்ளிவிட்டிருக்கின்றது. வாழ்வாதாரம், பாதுகாப்பு, வகைப்பொறுப்பு மற்றும் நீதி ஆகியவை அற்றுப்போனமையானது ஆயுத மோதலில்லாத ஒரு தேசம் கொடுக்கும் நலன்களை இப்பெண்கள் இன்னும் அனுபவிக்க முடியாத ஒரு நிலைமையினையே ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த மூன்று வருட காலத்தில் பெண்களின் பாதுகாப்பானது பல முனைகளில் சிதைவடைந்திருக்கின்றது. தமது பாதுகாப்பினையும் தமது குடும்பத்தின் பாதுகாப்பினையும் ஒரு சேர உறுதிப்படுத்திக் கொண்டு அதே வேளை தமது குடும்பத்தின் பொருளாதார மற்றும் சமூக நலனோம்புகைகளைத் தன்னந்தனியாகக் கவனிக்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்குப் பெண்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.




மூன்று தசாப்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு ஆற்றுப்படுத்தலினை வழங்கி அவர்களுக்கு உதவுவதற்கென சமுதாயத்தின் கடைநிலை மட்டங்களில் இயங்கும் பெண்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி செயலணியின் தொடர்ச்சியான இருப்பும் பயங்கரவாத தடைச் சட்டமும் தடையாக இருந்து வருகின்றன. புனர்வாழ்விலும் மீள்குடியேற்றத்திலும் இடம்பெறும் அரசாங்கத்தின் தொடர்ச்சியான தலையீடானது இந்த நிறுவனங்களின் பணிகளைப் பெரிதும் பாதித்து வருவதுடன் பயனுகரிகளுடன் சேர்ந்து ஒத்துழைத்துப் பணியாற்றும் நிறுவனங்களுக்கும் உதவி பயக்காதவையாக இருக்கின்றது. வடக்கு கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னமானது மக்கள் மத்தியில் அச்சத்தினை ஏற்படுத்தியிருப்பதோடு மட்டுமல்லாது பெண்களின் உரிமைகள் மீறப்படுவதற்கும் இட்டுச்சென்றுள்ளது. இராணுவமானது பல உணவுக் கடைகளையும் பலசரக்குக் கடைகளையும் திறந்துள்ளது. இதனால் வடக்கிலே பெண்களின் வாழ்வாதாரத் தெரிவுகள் துடைத்தழிக்கப்பட்டுள்ளன. முன்பு சிறிய கடைகளை நடத்திப் பல பெண்கள் தங்கள் வாழ்வாதாரங்களைக் கொண்டு நடத்தினர். மரக்கறி விற்பதிலும் கூட இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கின்றனர். இராணுவத்தினருடன் போட்டிபோட முடியாமையினாலும் அவ்வாறு போட்டி போட அஞ்சுவதனாலும் தமது வீட்டுத் தோட்டத்திலுள்ள மரக்கறிகளைப் பெண்கள் விற்க முடியாமலிருக்கின்றனர். இராணுவ முகாம்களையும் பயிற்சி நிலையங்களையும் அமைப்பதற்காக பல இடங்களில் இராணுவம் அரச காணிகளையும் தனியார் காணிகளையும் கையகப்படுத்தியுள்ளது. வறிய மக்களிடமிருந்து பலவந்தமாக எடுக்கப்பட்ட காணிகளில் இராணுவம் நெற்பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டுள்ளது. வடக்கு கிழக்கில் இராணுவம் அதன் பிரசன்னத்தின் அளவினைக் குறைக்கத் தயாராக இருப்பதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ள போதிலும் வடக்கு கிழக்கில் இராணுவம் நிர்மாணித்துள்ள பிரமாண்டமான



http://www.citizenwarrior.com/2011/03/international-womens-day-and.html

**வறிய மக்களிடமிருந்து பலவந்தமாக எடுக்கப்பட்ட காணிகளில் இராணுவம் நெற்பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டுள்ளது. வடக்கு கிழக்கில் இராணுவம் அதன் பிரசன்னத்தின் அளவினைக் குறைக்கத் தயாராக இருப்பதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ள போதிலும் வடக்கு கிழக்கில் இராணுவம் நிர்மாணித்துள்ள பிரமாண்டமான நிரந்தரக் கட்டமைப்புகளைப் பார்க்கையில் இது சாத்தியமானதாகத் தென்படவில்லை.**

நிரந்தரக் கட்டமைப்புகளைப் பார்க்கையில் இது சாத்தியமானதாகத் தென்படவில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறும் மேலதிகமாகவும் அதிக அளவிற்கும் விசாரணைகளை நடத்துமாறும் கோருகின்ற உத்தேச தீர்மானம் ஐ.நாவில் வரவுள்ள சந்தர்ப்பத்திலேயே இக்கூற்று வெளியிடப்படுகின்றது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இலங்கை அரசு செய்கின்ற நடவடிக்கைகளைப் பார்க்கையில் அது தான் கொண்டிருப்பதாகக் கூறுகின்ற நீதி மற்றும் வகைப் பொறுப்புக்கான கடப்பாடு பற்றிக் கரிசணை அற்றிருக்கின்றது என்பதை நாம் அறிவோம். இராணுவப் பிரசன்னம் பெருமளவிற்கு இருந்த போதிலும் இராணுவமானது மக்களின் பாதுகாப்பிற்குத்தான் இருக்கின்றது என அரசாங்கம் குறிப்பிட்ட போதிலும் கடந்த வருடத்தின் கிரீஸ் பூத நிகழ்வுகள் பெண்கள் முகம் கொடுக்கும் பாதிப்புறு நிலையினை எமக்கு ஞாபகப்படுத்துகின்றன.

வடக்கு கிழக்கில் பெண்கள் அவர்களின் வீடுகளிலும் சமுதாயங்களிலும் முகம் கொடுக்கும் வன்முறைக்கு மேலதிகமாக, இராணுவத்தினராலும் துணை இராணுவத்தினராலும் அரசாங்க உத்தியோகத்தர்களினாலும் வன்முறைக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாகியதாக பல முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. அதிகாரத்திலுள்ளவர்கள் இழைக்கின்ற வன்முறைகள் அதிகரித்திருப்பதானது பெண்களைக் குறிப்பாகப் பாதிப்புறு நிலைக்காளாக்கியிருக்கின்றது. அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றனர்.

இரண்டு பெண்கள் 2001ஆம் ஆண்டிலே மன்னாரிலே பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டமையும், இரட்டை வாய்க்கால் தடுப்புக் காவலில் இருந்தபோது பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பெண்கள் இராணுவத்தினரின் துன்புறுத்தலுக்குப் பயந்து நாட்டை விட்டு வெளியேறியமையும், விசுவமடுவில் 2010 ஆனியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவும் இராணுவத்தினரின் கரங்களால் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு சில உதாரணங்களாகும். இந்தச் சம்பவங்களை விசாரிக்காமை, அல்லது குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்யாமை அல்லது கைதுகளை மேற்கொள்ளாமை ஆகியவை சட்டத்தின் பிடியிலிருந்து

பாதுகாப்புப் பெறும் கலாசாரத்தினை உருவாக்கியுள்ளதுடன் பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பில் ஒரு போக்கினையும் உருவாக்கியுள்ளது. வடக்கு கிழக்கில் தற்போது வன்முறைகளில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பில் இந்த உண்மைகள் பிரதிபலிப்பதைக் காணலாம். பாலியல் வன்முறைச் சம்பவங்களில், குறிப்பாக அவை இராணுவத்தினரால் நிகழ்த்தப்படுகையில் அதற்கு மருத்துவ அறிக்கைகளை வழங்குவதற்கு சட்ட மருத்துவ அதிகாரிகள் மறுத்துள்ளமை தொடர்பான பல முறைப்பாடுகள் வடக்கு கிழக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

முன்னாள் பெண் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்கள் இராணுவத்தினராலும் சி.ஐ.டியினராலும் தொடர்ந்தும் துன்புறுத்தலுக்காளாகி வருகின்றனர். உள்ளூர் பொலிஸ் அல்லது இராணுவ நிலையத்தில் மாதத்திற்கொரு தடவை அவர்கள் ஆஜராக வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். துன்புறுத்தல் இல்லாமலாகுவதற்கு அவர்கள் திருமணம் முடிக்க வேண்டுமென அல்லது தகவல் கொடுப்போராக மாற வேண்டுமென பலவந்தப்படுத்தப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் வாழும் முன்னாள் பெண் போராளி ஒருவர் பொலிஸ் நிலையத்திற்குப் பதிவு செய்யச் சென்ற பொழுது அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட சம்பவமொன்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யுத்தத்தின் போது காணாமல் போன தமது உறவினர்களையும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களையும் பெண்கள் இன்னும் தேடி வருகின்றனர். காணாமல் போனவர்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் அது தொடர்பாக அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. தமது சம்பவங்களைப் பதிவு செய்த பெண்கள் எவரிடம் தகவல்களை வழங்கினார்களோ அந்த இராணுவ ஆளணியினராலேயே துன்புறுத்தலுக்காளான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நாம் LLRC அறிக்கையினை வரவேற்கின்றோம். ஆனால் இந்த நாடு முன்னேற வேண்டுமாயின் எவையெல்லாம் தேவையோ அவற்றிலிருந்தும் மிகச் சேய்மையான விடயங்களையே அறிக்கை குறிப்பிடுகின்றது. காணாமல் போதல் போன்ற பல்வேறு விதமான வன்முறைகளை விசாரிப்பதற்கென ஆணைக்குழுக்களை நியமிக்கின்ற ஒரு நீண்ட வரலாற்றினை நமது நாடு கொண்டுள்ளது. ஆனால் கடந்த காலத்தினை மேலோட்டமாக நோக்கினால் இவ்வாறான ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாமலிருப்பதுவும் வன்முறைகள் தொடர்ந்து நிகழ்ந்து வருவதும் புலனாகும். LLRC அமர்வுகளில் சாட்சியமளித்தோரில் பெரும்பான்மையானோர் பெண்களாக இருந்த போதிலும் பெண்கள் தொடர்பாகவும் அவர்கள் இருக்கின்ற பாதிப்புறு நிலை தொடர்பாகவும் LLRC கூருணர்வற்றதாக இருக்கின்றது.

அரசாங்கமானது மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அந்த நடவடிக்கைகள் எவையெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என விரும்பப்படுகின்றதோ அவற்றிற்கு பொருத்தமற்ற வகையிலேயே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நீர் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளற்ற மற்றும் வாழ்வாதாரத்திற்கான வசதிகளற்ற பொருத்தமற்ற தங்குமிடங்களில் பெண்கள் வாழ்ந்து வருகின்றனர். அதீத இராணுவமயமாக்கப்பட்ட இடங்களுக்கே பெண்கள் திரும்பி வரவேண்டிய நிலைமை நிலவுகின்றது.

வகைப்பொறுப்பு மற்றும் நீதி ஆகியவற்றின் மூலமாக மீளிணக்கம் மற்றும் சமாதானத்திற்கான பாதையில் இலங்கை செல்வதற்கு அதற்கு உதவுமாறும் சர்வதேச கண்காணிப்பினை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறைகளை வலுப்படுத்துமாறும் ஐ.நாவினையும் அதன் உறுப்பு நாடுகளையும் வடக்கு கிழக்கு பெண்கள் வலையமைப்பான நாங்கள் வேண்டுகின்றோம். பல் கலாசார மற்றும் பல் இனத்துவ நாடாக இலங்கையை மாற்றுகின்ற கனவிற்கான ஒரு கருவியாகவும் அதிகமானவற்றினை இழந்து தொடர்ந்தும் துயருற்று வருகின்ற பெண்களுக்கான நிலையான சமாதானத்தினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு கருவியாகவும் ஐ.நா மனித உரிமைக் கவுன்சிலின் உத்தேச பிரகடனத்தினை நோக்குமாறு நாம் இலங்கை அரசாங்கத்தினை வேண்டுகின்றோம். இந்த நாட்டின் இனத்துவ சிறுபான்மையினருக்கு, குறிப்பாக மூன்று தசாப்த கால யுத்தத்தினால் சீரழிந்து சின்னாபின்னமாகியுள்ள பெண்களுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஒரு வாய்ப்பு அதற்கு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் அதன் வாக்குறுதியினை நிறைவேற்றி இந்த தேசத்தின் உண்மையான பிரஜைகளாகப் பெண்களை மாற்றும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

---

*சர்வதேச மகளிர் தினப் பிரச்சாரத்தின் ஓரங்கமாக வடக்கு கிழக்கு பெண்கள் வலையமைப்பினால் வெளியிடப்பட்டது (08 பங்குனி 2012)*

# நாமும்... எமது வாழ்வும்...

நம்பிக்கைகள்
வலுவிழந்து
ஏக்கங்கள்
வலுவடைந்து விட்டதால்
உயிர்ப்பின்றி
சோர்வடைந்த விழிகளில்
பதுங்கி வாழ்க்கைப்பட்ட
வெற்றுக் காலங்கள்...

சிதைக்கப்பட்ட
வாழ்வாதாரங்களின்
எச்சங்களிடையே மட்டுமான
வாழ்தலுக்கான
தேடலும்
முனைப்பும்....

எட்டாத
தொலை தூரங்களில்
நிறமிழந்து
சுவை மறந்து
நினைவுகளிடையே மட்டுமான
உறவுகளின் சஞ்சாரம்....

எட்டாக் கனியாகிவிட்ட
விடியலுக்கும்
விடுதலைக்கும்
இடையில்
கனத்த மனத்தோடும்
கண்களில் நீரோடும்
காலத்தின் பிடியிலே
கட்டுண்டவர்களாக
நாமும்...
எமது வாழ்வும்....

குகா



# சந்தா விண்ணப்பப் படிவம் 2012

பெயர்/அமைப்பு : ....................................................................

முகவரி : ....................................................................

....................................................................

....................................................................

தொலைபேசி இல : ....................................................................

கையொப்பம் : ....................................................................

திகதி : ....................................................................




**கோசம்...**

**ஓராண்டுக்கான சந்தா**

(இலங்கை ரூபா 300 | இந்திய ரூபா 350)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி Women Action Network, 8/3, 202 , W.A. Silva Mawathe, Colombo 06, Sri Lanka.
Email: tmwn2010@gmail.com


# சந்தா விண்ணப்பப் படிவம் 2012

பெயர்/அமைப்பு : ....................................................................

முகவரி : ....................................................................

....................................................................

....................................................................

தொலைபேசி இல : ....................................................................

கையொப்பம் : ....................................................................

திகதி : ....................................................................




**கோசம்...**

**ஓராண்டுக்கான சந்தா**

(இலங்கை ரூபா 300 | இந்திய ரூபா 350)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி Women Action Network, 8/3, 202 , W.A. Silva Mawathe, Colombo 06, Sri Lanka.
Email: tmwn2010@gmail.com

**Women's Action Network**
8/3 - 202, W.A. Silva Mawathe,
Colombo 06, Sri Lanka.
e-mail: tmwn2010@gmail.com

விலை ரூபா 25.00